பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 16 திங்கட்கிழமை 29.03.2021 கதிர் 144

இனி இது ரகசியம் அல்ல!

கொரோனா வைரஸ் அதிர்ச்சியில் மூழ்கிக் கிடக்கும் யாழ் மக்களுக்கு – வடபகுதி மக்களுக்கு – இன்னொரு அதிர்ச்சித் தகவல் இது.

கொழும்பிலும் தெற்கின் பிற இடங்களிலும் அறுபது வயதுக்கு மேற்பட்டோருக்கு கொரோனாத் தடுப்பூசி வழங்கும் பக்கம்02 »

● பிரிட்டன் தமிழர் பேரவை ● உலகத் தமிழர் பேரவை

● கனேடியத் தமிழர் பேரவை ● ஆஸி தமிழ்க் காங்கிரஸ் உட்பட

# ஏழு புலம்பெயர் அமைப்புகளை தடை செய்தது இலங்கை அரசு

## முந்நூறுக்கும் மேற்பட்டோர் கறுப்புப் பட்டியலில் சேர்ப்பு



கொழும்பு,மார்ச்29

இலங்கைக்கு எதிரான ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், பிரிட்டன் தமிழர் பேரவை, உலகத் தமிழர் பேரவை உள்ளிட்ட வெளிநாடுகளில் இயங்கும் ஏழு புலம்பெயர் அமைப்புகளையும், 300 இற்கும் மேற்பட்ட நபர்களையும் கோட்டாபய அரசு தடை விதித்து கறுப்புப் பட்டியலில் சேர்த்துள்ளது. ☞2



## காங்கேசன்துறைக் கடலில் வித்தியாசமான திரவப் படை

காங்கேசன்துறை மற்றும் அதனை அண்டிய பகுதிக் கடற்கரைகளில் வித்தியாசமான முறையிலான இரசாயன அல்லது உயிரியல் சார்ந்த படை ஒன்று மிதப்பது இன்று மாலை 2மணி முதல் அவதானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான ஆய்வுகளில் கடல் கரையோரச் சூழல் பாதுகாப்பு அதிகார சபையினர் முன்னெடுத்துள்ளனர்.

குறித்த ஆய்வின் முடிவுகள் வரும் வரை முடிந்தளவு கடலில் நீராடுவதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும்,மாதிரிகள் தேசிய நீர்வள ஆராய்ச்சி மத்திய நிலையத்துக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## வடக்கில் தொற்றாளர்களாக நேற்றும் பன்னிரண்டு பேர்!

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் அடிப்படையில் வடக்கில் 12பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

அவர்களுள் 09பேர் யாழ். மாவட்டத்ததைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த 09 தொற்றாளர்களில் 06பேர் யாழ்ப்பாணம் ☞2

இலங்கை மீண்டெழ வேண்டும்!

## ஐ.நாவின் தீர்மானம் குறித்து கரு கருத்து

ஐக்கியநாடுகள்மனிதஉரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கும் தற்போதைய சூழ்நிலையில், நாம் அனைவரும் ஒற்றுமையுடன் செயற்பட வேண் ☞2

## யாழ் வர்த்தக சங்கத்தின் தலைவர் மீது சுகாதாரப் பணிப்பாளர் குற்றச்சாட்டு!

### ஆனரல் அவரோ முழு அளவில் மறுப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,மார்ச் 29

யாழ்ப்பாணத்தில் மூடப்பட்ட வர்த்தக நிலையங்களின் பணியாளர்களைத் தனிமைப்படுத்தும் நோக்கில் பணியாளர்களின் விவரத்தை கோரியபோதும் வர்த்தக சங்கம் இதுவரை வழங்கவில்லை என மாகாண சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் நேற்றுத் தெரிவித்தார்.

யாழப்பாணக் குடாநாட்டில் தற்போது அதிகரிக்கும் கொரோனா நிலைமை தொடர்பில் நேற்றுக் காலை மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தலைமையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலையடுத்து இடம்பெற்ற ☞2

## அரசியல் தீர்வு கட்டாயம் வேண்டும்; சர்வதேசத்தின் விருப்பமும் இதுவே

### அரசிடம் திஸ்ஸ எம்.பி. இடித்துரைப்பு




இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு வழங்குவது கட்டாயமானது. இதனையே சர்வதேசமும் ஆரம்பத்தில் இருந்து வலியுறுத்துகின்றது.

– இவ்வாறு லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும் ஸ்ரீலங்கா பொதுஜன ☞2

●பொருளாதாரத் தடைகள் ●ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை ரத்து

●படைத் தளபதிகள், பிரதானிகளுக்குப் பிரயாணத் தடை உட்பட



## பல நெருக்குவார நடவடிக்கைகள் இலங்கைக்குக் காத்திருக்கின்றன

### அரசுக்கு சம்பிக்க எச்சரிக்கை

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் இலங்கைக்குப் பொருளாதாரத் தடைகளை விதிக்கக் கூடும் என ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க எச்சரித்துள்ளார்.

ஜி.எஸ்.பி. பிளஸ் போன்ற சலுகைகள் இல்லாமல் போகலாம் என்பதுடன் படைப் பிரதானிகளுக்கு எதிரான வெளிநாட்டுப் பயணத்தடையும் நீடிக்கப்படும் அபாயம் இருப்பதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேறுவதைத் தடுப்பதற்கான இராஜதந்திர நகர்வுகளைத் தற்போதைய அரசு உரிய வகையில் முன்னெடுக்கவில்லை.

இதனால் ஜனாதிபதி, பிரதமர் ☞2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திட்டம் நடைமுறைப்படுத்தப்படத் தொடங்கி வாரங்கள் கடந்து விட்டன. தமிழர்கள் அதிகம் வாழும் வெள்ளவத்தையிலேயே கணிசமானோர் தடுப்பூசி பெற்றுவிட்டனர்.

இந்தத் திட்டம் இன்னும் மூன்று நாள்களில் – வரும் முதலாம் திகதி முதல் – நாட்டின் முழு மாவட்டங்களிலும் ஆரம்பமாகின்றது. ஆனால் வடக்கில் மட்டும் இல்லை.

வந்திருக்கும் கொரோனாத் தடுப்பூசி போதுமானதாக இல்லை, நீங்கள் மட்டும் இப்போதைக்குக் கேட்காதீர்கள் என்று மேலதிகாரிகள் கொழும்பில் கூற, வடக்குப் பிரதிநிதி – பிரகிருதி – தலையாட்டி விட்டு வந்து விட்டார் என்று தகவல்.

இந்த விடயம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் காதுகளுக்கு எட்டியமையை அடுத்து, இன்று நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விவகாரத்தை கிளப்பி, தீர்வு காண்பதற்கு அவர் தீவிர முயற்சி எடுத்திருக்கிறார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏதோ ஏப்ரல் முதலாம் திகதி ஆரம்பமாகும் இத்திட்டத்தில் வடக்கு மக்கள் 'ஏப்ரல் Fool' ஆகாவிட்டால் சரி.

வடக்கில் ஒரு புறம் தீவிரமாகப் பரவும் கொரோனாத் தொற்றை எதிர்கொண்டு அதைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் தமது முழுத் தீவிரத்தையும் காட்ட வேண்டிய இக்கட்டில் சுகாதார பணியாளர்கள். அப்பிரிவுக்கு ஆளணி, அம்பு பற்றாக்குறையும் உண்டு. இச்சமயத்தில் தடுப்பூசி வழங்கும் திட்டத்தையும் முன்னெடுப்பது அவர்களுக்குக் கஷ்டமானதாக இருக்கலாம். ஆனால் எப்படியும் செய்தேயாகத்தான் வேண்டும். தவிர்க்க முடியாதது. இதற்குள் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரோ அதற்கு மேலதிகமாக யாழ் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் பதில் கடமை புரிகின்றார். இந்த சுகாதார நெருக்கடி சமயத்தில் ஒருவரே மாகாண, மாவட்டப் பொறுப்புகளை வைத்திருப்பது உசிதமான செயற்பாடல்ல. நெருக்கடியான இச்சமயத்திலாவது பொருத்தமானவர்களுக்கு பதவியைப் பகிர்ந்தளித்து, அவர்களைத் தட்டிக் கொடுத்து, அடுத்த தலைமுறையையும் தயார் செய்ய வேண்டும். ஒரே ஆள் எல்லாப் பதவிக் கதிரைகளையும் ஆக்கிரமித்து நிற்பது சரியானதும் அல்ல.

வடக்கு மாகாண ஆளுநருக்கு இவ்விடயம் சமர்ப்பணம்.

* * * * * *

*'நல்லூர்க் கோவிலைச் சுற்றி கழிவு ஓயில் ஊற்றப்பட்டுள்ளது; விஷமிகள் கைவரிசை'* என்று ஒரு செய்தி முகப் புத்தகப் பதிவில் வெளியானது.

அதற்கு உடனே ஒரு மறுப்பு பதிவானது.

*'இல்லை, இல்லை. கோவில் நிர்வாகமே அதனைச் செய்தது'* என்று அந்த மறுப்பில் விளக்கம் கூறப்பட்டது.

உடனே முதலில் செய்தி பதிவிட்டவர் தனது பதில் விளக்கத்தைக் கொடுத்தார்.

*'அதுதான் சரியாகப் பதிவிட்டுள்ளேன் – விஷமிகள் வேலை என்று'* என்று அந்தப் பதில் விளக்கம் அமைந்தது.

ஆக, நல்லூர் நிர்வாகத்தின் இந்த நடவடிக்கையை விஷமிகள் வேலையாக நோக்கும் விமர்சனம் கூட வெளியாகியிருக்கின்றது.

நல்லூர்க் கோயிலும், சுற்றாடலும், கட்டடங்களும் தனியாருக்குச் சொந்தமானவை என்பது உண்மைதான். அதற்காக தம்மிஷ்டப்படி எல்லாம் செய்யலாம் என எஜமானர் விட்டேத்தியாக நடக்க முடியாது.

கோவில் – அதுவும் நல்லூர் ஆலயம் – யாழ்ப்பாணத் தமிழர்களின் சமூக மையம். அங்கு சமூக விரோத நடவடிக்கைகள் அரங்கேறுகின்றன என்றால் அதைக் கட்டுப்படுத்தி ஆலயத் தூய்மையைப் பேணும் பொறுப்பு ஆலய எஜமானருக்கு மட்டுமன்றி, சமூகத்துக்கும் உண்டு. அது மட்டுமல்ல, அதைக் கட்டப்படுத்தும் வழிமுறை கழிவு ஓயில் ஊற்றுவது அல்ல. அப்படிக் கழிவு ஓயில் ஊற்றித்தான் சமூக விரோதச் செயற்பாடுகளை ஆலயத்தில் கட்டுப்படுத்த வேண்டும் என்ற இழிநிலையில் யாழ்ப்பாணம் இல்லை. ஆனால் எஜமானரின் நடவடிக்கை அத்தகைய தோற்றத்தைத்தான் யாழ்ப்பாணத்துக்குத் தந்துள்ளது.

இன்னொரு விடயம். நல்லூர் தேரடி அரட்டைக்கு நீண்ட பாரம்பரியம் உண்டு. யோகர் சுவாமிகள் வரை பலர் உருவெடுத்த புனித மையம்தான் தேரடி. அதற்கு கழிவு ஓயில் ஊற்றுவது யோகர் சுவாமிகள் போன்ற அருளாளர்கள் அங்கு அமர்வதற்கும் கூட விதிக்கப்பட்ட தடைதான்.

தனி நபரின் ஆலயம் என்ற மிடுக்கில் இக்காரியங்கள் செய்யப்படுவதால் இப்படி ஒரு பத்தியில் எங்களுக்குள் பொருமுவதைத் தவிர நமக்கு வேறு என்ன வழி இருக்க முடியும்?

– மின்னல் –

## பல நெருக்குவார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் அமைச்சரவைக்கு மட்டுமல்ல எதிர்காலத்தில் நாட்டு மக்களுக்கும்தான் தாக்கம் ஏற்படப் போகின்றது. எனவேதான் இதனைப் பாரதூரமானதொரு பிரச்சினையாக கருதுகின்றோம். நல்லாட்சி அரசால்தான் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது என்றதொரு விம்பத்தை உருவாக்குவதற்கு தற்போதைய அரசு முயற்சிக்கின்றது.

ஆனால், உள்நாட்டு விவகாரத்தில் சர்வதேசம் தலையிடுவதற்கான களத்தை மஹிந்த ராஜபக்‌ஷவே அமைத்துக் கொடுத்தார். போர் முடிவடைந்த பின்னர் ஐ.நாவின் முன்னாள் செயலாளர் பான் கீ மூனுடன் இணைந்து கூட்டறிக்கை விடுத்தார்.

அதில் பொறுப்புக்கூறலுக்கு இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டது. இந்த பொறுப்புக்கூறல் தொடர்பில்தான் இன்று சர்வதேசம் கேள்வி எழுப்புகின்றது. இலங்கை தொடர்பில் முதலாவது தீர்மானம் முன்வைக்கப்பட்டபோது அதில் இலங்கை வெற்றி பெற்றது.

13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படும், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என உறுதிமொழி வழங்கப்பட்டதால் ஆதரவு கிடைத்தது.

இதன் பிரகாரம்தான் நல்லிணக்க ஆணைக்குழு, பரணகம ஆணைக்குழு ஆகியன அமைக்கப்பட்டன. ஆனால், உரிய வகையில் நடவடிக்கை இடம்பெறாததால்தான் பாரதூரமான தீர்மானங்கள் நிறைவேறின.

இந்நிலையில் நல்லாட்சி அரசு வந்த பிறகு சர்வதேச நெருக்கடி குறைந்தது. மின்சாரக்கதிரை உள்ளிட்ட சர்ச்சைகள் இருக்கவில்லை. வெளிநாடுகளில் வாழும் விடுதலைப் புலிகள் பலவீனமடைந்தனர்.

பொருளாதார இழப்புகள் ஏற்படவில்லை. ஆனாலும், எவருடனும் கலந்துரையாடாமல் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியமை தவறான செயலாகும். எது,எப்படி இருந்தாலும் ஒற்றையாட்சி, இறையாண்மை, ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் படையினரை நாம் பாதுகாப்போம்.

இதில் பின்நிற்கப் போவதில்லை. ஜெனிவாப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இந்த அரசு முயற்சிக்கவில்லை. அதனை வைத்து உள்நாட்டில் பிரச்சாரம் செய்தது. வெளிநாடுகளுக்கு உறுதி மொழிகள் வழங்கப்பட்டன.

அவற்றை நிறைவேற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேற்குலகத்துக்கு அடிபணியமாட்டோம் என சூளுரைக்கின்றனர்.

ஆனால், அமெரிக்காவின் கருணையால்தான் கோட்டாபய ராஜபக்‌ஷ ஜனாதிபதியானார் என்பதை மறந்துவிட முடியாது. இந்தியா, ஜப்பான், தென்கொரியா, நேபாளம் உள்ளிட்ட நாடுகளின் ஆதரவை பெறமுடியாமல் போனமை தொடர்பில் இந்த அரசு பொறுப்புக்கூற வேண்டும்.

அதேவேளை, போருக்குப் பின்னர் மனித உரிமைகள், ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கு தற்போதைய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

மாறாக, மாற்று கருத்துகளை உடைய அரசியல்வாதிகள் வேட்டையாடப்பட்டனர். தற்போது கூட எமது பிரஜா உரிமையைப் பறிப்பதற்கு முயற்சிக்கின்றனர்.

20ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் நீதிமன்றம் மற்றும் பொலிஸ் ஆகியவற்றின் சுயாதீனம் இல்லாமல் ஆக்கப்பட்டது. இவ்வாறு உள்நாட்டில் ஜனநாயகம், மனித உரிமைகளுக்கு சவால் விடுக்கப்பட்டுள்ளதையே ஐ.நா. மனித உரிமைகள் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இங்கு ஜனநாயகக் கட்டமைப்பு உரிய வகையில் [illegible] களை முன்வைக்கவேண்டிய தேவை சர்வதேசத்துக்கு எழாது.

அதேபோல தகுதியற்ற ஒருவரே வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். அமைச்சர் ஒருவர் இருந்தாலும் அமைச்சின் செயலாளரே அமைச்சை வழிநடத்துகின்றார்.

இந்தியாவுக்கு இன்னும் தூதுவர் ஒருவர் நியமிக்கப்படவில்லை. முன்னர், தகுதியான, அனுபவம் வாய்ந்தவர்களே ஜெனிவா அனுப்பப்படுவர், தற்போது என்ன நடக்கின்றது?

குறிப்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் பயங்கரமானதொன்றாகும். வருகின்ற செப்டெம்பர் மாதத்தில் இது வேறு வடிவில்கூட வரலாம். சர்வதேச விசாரணைக்கு வழிசமைக்கலாம்.

பொருளாதாரத்துக்கு மரண அடி கொடுக்கும் விதத்தில் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் இலங்கைக்கான சந்தை வாய்ப்பை மூடலாம். ஜி.எஸ்.பி. பிளஸ் போன்ற சலுகைகள் இல்லாமல் போகலாம். படைப் பிரதானிகளுக்கான பயணத்தடை நீடிக்கப்படலாம். – என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## யாழ் வர்த்தக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நகரின் மத்தியில் உள்ள வர்த்தக நிலையங்கள மூடப்பட்டாலும் வர்த்தகர்களும் பணியாளர்களும் நடமாடுவதனால் எவ்வாறு கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியும் என செய்தியாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடரபில் மாகாண சுகாதார திணைக்களப் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் மேலும் விவரம் தெரிவிக்கையில் –

வர்த்தக நிலையங்களின் ஒரு பகுதி முடக்கப்பட்டபோது அந்தப் பகுதி வர்த்தக நிலைய உரிமையாளர்கள், பணியாளர்களின் விவரத்தை வழங்குமாறு கோரியிருந்தோம். அந்த விவரங்களை உரிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்கு விவரங்களை அனுப்பி சம்பந்தப்பட்டோரை தனிமைப்படுத்த ஏதுவாக இந்த விவரங்களை நேற்று முன்தினம் மாலையில் வழங்குமாறு கோரப்பட்டது.

இருந்தபோதும் இந்த விவரங்கள் கிடைத்தவுடன் அந்த அந்த சுகாதார வைத்திய அதிகாரிகளிற்கு அனுப்பி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இவ்வாறு கொரோனாத் தொற்று அதிகரித்த நிலையில் அதனைத் தடுப்பதற்காக எடுக்கும் நடவடிக்கைக்கு வர்த்தக சங்கம் ஏன் உரிய காலத்தில் விவ்ரத்தை வழங்கி உதவவில்லை என வர்த்தக சங்கத் தலைவர் ஜெயசேகரத்திடம் தொடர்பு கொண்டு கேட்டபோது –

சுகாதாரத்திணைக்களத்தின் பணிப்பாளரின் குற்றச்சாட்டுத் தவறானது. ஏனெனில். யாழ்ப்பாணம் மாநகர சபையின் பிரதேச பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி விடுத்த கோரிக்கையின் பெயரில் நேற்று (சனிக்கிழமை) மாலையே 785 பேரினது விவரங்கள் முழுமையாகச் சேகரிக்கப்பட்டு கையளிக்கப்பட்டு விட்டது. அந்த விவரத்தினை ஒரு பொதுச் சுகாதார பரிசோதகர் நேரில் வந்து பெற்றுச் சென்றார்.

இதேநேரம் இன்றைய தினம் (ஞாயிறு) இடம்பெற்ற பி.சி.ஆர். பரிசோதனைக்கும் இந்த விவரத்தினையுடையவர்களை மட்டும் முன்னுரிமையிலும் ஏனையோரை அடுத்தும் அழைத்திருந்தால் அங்கே அதிக சன நெரிசலும் நெருக்கடியும் ஏற்பட்டிருக்க மாட்டாது. – என்றார்.

## ஏழு புலம்பெயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவால் இது தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் ஒன்று நேற்று வெளி யிடப்பட்டுள்ளது.

2021 பெப்ரவரி 25 ஆம் திகதியிடப்பட்டுள்ள குறித்த வர்த்தமானி அறிவித்தல் தற்போது வெளிவந்துள்ளது.

'1968ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சபை சட்டம் 2012ஆம் ஆண்டின் முதலாம் இலக்க ஐக்கிய நாடுகள் சபை ஒழுங்கு விதியின் பிரகாரம், பெயர் குறிப்பிட்ட ஆள்களின் நிரலுக்கான திருத்தம்' என்ற தலைப்பில் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

2016 நவம்பர் 9ஆம் திகதிய 1992/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பெயர் குறிக்கப்பட்ட ஆள்களின் நிரல் இதில் திருத்தப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி பிரிட்டன் தமிழர் பேரவை, கனேடிய தமிழர் பேரவை, ஆஸ்திரேலிய தமிழ்க் காங்கிரஸ், உலகத் தமிழர் பேரவை, கனேடிய தமிழர் தேசிய அவை, தமிழ் இளைஞர் அமைப்பு மற்றும் உலக தமிழர் ஒருங்கிணைப்புக் குழு ஆகிய அமைப்புக்களே மீண்டும் தடை செய்யப்பட்டு கறுப்புப் பட்டியில் சேர்க்கப்பட்டுள்ளன.

இதேவேளை, தடை செய்து கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள வெளிநாடுகளில் வசிக்கும் 300 இற்கும் மேற்பட்ட நபர்கள் தொடர்பான விவரங்களும் அந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டுக்கு முன்னரான மஹிந்த ராஜபக்‌ஷவின் ஆட்சிக் காலத்தில் புலம்பெயர் அமைப்புகள் பலவற்றுக்கு தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த நல்லாட்சி காலப்பகுதியில் பிரிட்டன் தமிழர் பேரவை, கனேடியத் தமிழர் பேரவை, ஆஸ்திரேலிய தமிழ்க் காங்கிரஸ், உலகத் தமிழர் பேரவை, கனேடிய தமிழர் தேசிய அவை , தமிழ்த் தேசிய அவை, தமிழ் இளையோர் அமைப்பு மற்றும் உலக தமிழர் ஒருங்கிணைப்புக் குழு உள்ளிட்ட அமைப்புகளின் தடை நீக்கப்பட்டிருந்தது.

அதேவேளை, 269 நபர்களுக்கான தடையும் கடந்த நல்லாட்சி அரசால் நீக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், மீண்டும் குறிப்பிட்ட அமைப்புகள் மற்றும் நபர்களுக்கு தடை விதிப்பதற்கு தற்போதைய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

## வடக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதனா மருத்துவமனையைச் சேர்ந்தவர்களாவர்.

மேலும், சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனையில் இருந்து ஏனைய மூன்று தொற்றாளர்களும் இனங் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் பி.சி.ஆர். பரிசோதனைகள் பெரிய அளவில் முன்னெடுக்கப்படவில்லை என்பது குறிப் பிடத்தக்கது.

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இலங்கையின் சுயாதீனத்தன்மைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் இனப் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு வழங்க முடியும். சமர்ப்பிக்கப்பட்டுள்ள சர்வகட்சித் தலைவர் குழு அறிக்கையில் அதற்கான பொறிமுறைகள் உள்வாங்கப்பட்டுள்ளன. சர்வ கட்சி தலைவர் குழு அறிக்கையைச் செயற்படுத்தியிருந்தால் பல பிரச்சினைகளுக்கு இன்று தீர்வு கிடைக்கப்பெற்றிருக்கும் – என்றார்.

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாயக நாடொக இலங்கை மீண்டெழ வேண்டும்.

– இவ்வாறு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

அவர் தனது ருவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தப் பதிவில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:–

ஜெனிவாவில் இலங்கை குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தற்போது ஒரே நாட்டவர் என்ற வகையில் நாம் அனைவரும் ஒற்றுமையாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

அதேவேளை, நாட்டு மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு ஏதேனும் குறைகள் மற்றும் விடுபாடுகள் இருப்பின், அவை தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும்.

உண்மையான ஜனநாயக நாடொன்றாக இலங்கை மீண்டெழ வேண்டும். ஏனெனில் ஒருபோதும் நாம் தனித்துச் செயற்பட முடியாது – என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் கொள்கைகளை முன்னிலைப்படுத்த அனைவரும் உறுதியுடன் செயற்படவேண்டும்!

## கோட்டா அறைகூவல்



தனிநபர்களை அல்லாது அரசாங்கத்தின் கொள்கைகளை முன்னிலைப்படுத்த அனைவரும் உறுதியாக இருக்க வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொள்கைகள் தோல்வியுற்றால், நாடு மீண்டும் அழிவுக்கு உள்ளாவதைத் தவிர்க்க முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர் -

அரசாங்கத்தின் மீது மக்கள் வைத்துள்ள எதிர்பார்ப்புகளை பூர்த்திசெய்து அபிவிருத்திப் பணிகளைத் தொடர வேண்டும். அரசாங்கத்தின் திட்டங்களை முறையாக செயற்படுத்துவதன் மூலம் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.

தனிநபர்களை அல்லாமல், அரசாங்கத்தின் கொள்கைகளை முன்னிலைப்படுத்த அனைவரும் உறுயாக இருக்க வேண்டும். கொள்கைகள் தோல்வியுற்றால் நாடு மீண்டும் அழி வுக்கு உள்ளாவதைத் தவிர்க்க முடியாது.

அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டுவருவதற்கு அளித்த ஆதரவையும் அர்ப்பணிப்பையும் அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் திட்டங்களை முன்னெடுப்பதில் அனைவரிடமிருந்தும் எதிர்பார்க்கின்றேன். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சகல முயற்சிகளுக்கும் இலங்கைக்கு ஆதரவு

**வழங்கத் தயார் என்கிறார் பிரி. வெளிவிவகார அமைச்சர்**



*கொழும்பு, மார்ச் 29*

*இலங்கையில் அர்த்தமுள்ள வகையிலான நீதிப்பொறிமுறையை வலுப்படுத்துவதற்கும் பொறுப்புக்கூறலையும் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதையும் உறுதிப்படுத்துவதற்கும் முன்னெடுக்கப்படும் அனைத்து முயற்சிகளுக்கும் ஆதரவு வழங்குவதற்குத் தயாராக இருப்பதாக பொதுநலவாய நாடுகள் மற்றும் ஐக்கிய நாடு களுக்கான பிரிட்டனின் வெளி விவகார அமைச்சர் தாரிக்அஹமட் குறிப்பிட்டுள்ளார்.*

*இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-*

*இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள புதிய பிரேரணையை வரவேற்கின்றேன்.*

*இது இலங்கையில் போரின் பின்னரான காலப்பகுதியில் நீதியையும் பொறுப்புக்கூறலையும் உறுதிப்படுத்துவதில் சர்வதேச சமூகம் தொடர்ந்தும் அக்கறை கொண்டிருப்பதை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.*

*அதுமாத்திரமன்றி இலங்கையில் கடந்த காலத்தில் இடம்பெற்ற பாரிய மனித உரிமை மீறல்கள் மீண்டும் இடம்பெறுவதற்கான அச்சம் இருப்பதாகக் குறிப்பிட்டு மனிதஉரிமைகள்ஆணையாளரால் வெளியிடப்பட்ட அறிக்கையின் பிரதிபலிப்பாகவும் இந்தப் புதிய பிரேரணை அமைந்துள்ளது.*

*அதேவேளை, பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவதற்காக எதிர்காலத்தில் முன்னெடுக்கப் படவிருக்கும் நடவடிக்கைகளுக்கு அவசியமான ஆதாரங்களைத் திரட்டுவதையும் கண்காணிப்புக் களை மேற்கொள்வதையும் ஐக்கிய நாடுகள் சபை தொடரவேண்டும். - எனக் குறிப்பிட்டுள்ளார்*

## இந்தியாவில் கொரோனா தொற்று அதிகரிப்பு: விளக்குகின்றார் வைத்தியர் யமுனானந்தா



இந்தியாவில் கொரோனாத் தொற்று மீள அதிகரித்தமைக்கு கொரோனா வைரஸில் ஏற்பட்ட பரம்பரை அலகுத் திரிபுத் தன்மையே காரணமாகும் என மருத்துவர்.சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

கொரோனா வைரஸ் மனித உடலில் தொற்றை ஏற்படுத்தும்போது உடலின் எதிர்ப்புச் சக்தி கொரோனா வைரஸில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது.

அதே போல் தடுப்பு மருந்து செலுத்தியவர்களின் உடலில் உள்ள எதிர்ப்பு சக்தியையும் கொரோனா வைரஸ் எதிர்கொண்டு மாற்றத்துக்கு உள்ளாகின்றது.

இத்தகைய சூழலில் மீளவும் கொரோனாத் தொற்று அலை ஏற்படுவதற்கு மாற்றமடைந்த கொரோனா வைரஸே காரணமாகும்.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு (Track, Trace, Treat) சோதித்து கண்டறிந்து சிகிச்சையினை மென்மேலும் தொடரல் வேண்டும். அடுத்து சமூக இடைவெளி பேணல், முகக் கவசம் அணிதல், கைகளை அடிக்கடி கழுவுதல் என்பவற்றைத் தவறாது கடைப்பிடித்தல் வேண்டும்.

இந்தியாவில் ஏற்பட்டுள்ள நோய்த் தொற்று நிலைக்குச் சமாந்தரமாக எமது பகுதியில் ஏற்படாது இருப்பதற்கு இத்தகைய விழிப்புணர்வு நடவடிக்கைகள் மிகவும் இன்றியமையாதவையாகும். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஈஸ்டர் தாக்குதலால் பலிக்கடா ஆக்கப்பட்ட முஸ்லிம் சமூகத்தினருக்கு நீதி வேண்டும்

**என்கிறார் வேலுகுமார்**



ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக அனைத்து விடயங்களும் கண்டறியப்பட்டு நீதி நிவாரணத்துக்காக ஏங்கித் தவிக்கும் கத்தோலிக்க சமூகத்துக்கு நீதி பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

அதேபோல குறித்த தாக்குதலை அடிப்படையாகக்கொண்டு அரசியல், பொருளாதாரம் மற்றும் இதர வழிகளில் பலிக்கடாக்களாக்கப்பட்ட முஸ்லிம் சமூகத்துக்கும் நீதி கிடைக்கவேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் கண்டி அலுவலகத்தில் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் சிலருடன் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற 'சமூக நீதி' தொடர்பான கலந்துரையாடலின்போது கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இதன்போது மேலும் தெரிவித்த அவர் -

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை முழுமையற்றதொன்றாகவே இருக்கின்றது. அதுமட்டுமல்ல அந்த அறிக்கையின் இணைப்புகள் இன்னும் பகிரங்கப்படுத்தப்படவில்லை.

எனவே ஒரு பகுதியை வைத்துக் கொண்டுதான் தற்போது விவாதம்கூட நடைபெறுகின்றது.

குறித்த தாக்குதலின் பின்புலம் என்ன, பிரதான சூத்திரதாரிகள் யார், திட்டமிட்டவர்கள் யார் என்பன உட்பட தாக்குதல் தொடர்பாக அனைத்து விடயங்களும் கண்டறியப்பட வேண்டும் என்பதுதான் பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை உட்பட அனைவரினதும் கோரிக்கையாக இருந்தது.

இந்நிலையில் தாக்குதலை தடுத்து நிறுத்துவதற்கு தவறியவர்கள் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு கூடுதல் கவனம் செலுத்தியிருந்தாலும் அடி, முடி தொடர்பில் உரிய வகையில் ஆராயவில்லை என்பதுதான் பொதுக்கருத்தாக இருக்கின்றது.

எனவே ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக அனைத்து வழிகளிலும் உண்மைகள் கண்டறியப்படவேண்டும். சூத்திரதாரிகள் யார் என்பது தொடர்பிலும் தாக்குத லின் உண்மையான நோக்கமும் உரிய வகையில் பகிரங்கப்படுத்தப்படவேண்டும்.

இதன்பின்னணியில்செயற்பட்டுள்ள வெளி சக்திகள் உள்ளிட்ட விடயங்களும் வெளிச்சத்துக்கு வரவேண்டும். அவ்வாறு செய்வதன் ஊடாகவே பாதிக்கப்பட்ட கத்தோலிக்க சமூகத்துக்கு நீதியை பெற்றுக்கொடுக்ககூடியதாக இருக்கும்.

மேலும் ஈஸ்டர் தாக்குதலை நடத்தியவர்கள் முஸ்லிம் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக, ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகம் மீதும் பேரினவாதிகள் பயங்கரவாத முத்திரை குத்தினர். இஸ்லாம் மதத்தையும் அவதூறுபடுத்தினர். அப்பாவி முஸ்லிம் மக்கள் பலிக்கடாக்களாக்கப்பட்டனர். அவர்கள் வேட்டையாடப்பட்டனர்.

முஸ்லிம் வியாபாரிகளின் வர்த்தகமும் குறிவைக்கப்பட்டு தாக்கப்பட்டது. எனவே தாக்குதலையடுத்து பல வழிகளிலும் பாதிக்கப்பட்ட முஸ்லிம் சமூகத்துக்கும் நீதி வேண்டும்.

அவர்கள் தொடர்பான களங்கம் நீக்கப்படவேண்டும். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## எரிபொருள் பற்றாக்குறை நாட்டில் ஏற்படவில்லை

நாட்டில் எரிபொருள் பற்றாக்குறை இல்லை என இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

உலகின் பரபரப்பான கப்பல் போக்குவரத்து இடமான சுயஸ் கால்வாயில் கொள்கலன் கப்பல் ஒன்று தரைதட்டி கொண்டது.

இதன் காரணமாக பல கப்பல் சேவைகள் தடைபட்டுள்ள நிலையில் எரிபொருள் பற்றாக்குறை ஏற்படும் என சமூக வலைத்தளங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் நாட்டில் எரிபொருள் பற்றாக்குறை இல்லை என இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

## ஒரு மில்லியன் மக்களிடம் பிறப்புச்சான்றிதழ் இல்லை!



தற்போது நாட்டில் வசிக்கும் ஒரு கோடியே 80 லட்சம் மக்களில் 10 லட்சம் மக்களிடம் பிறப்புச் சான்றிதழ் இல்லை என அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கம்புறுபிட்டி பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் பலர் தேசிய அடையாள அட்டைகள் இல்லாமல் இருக்கின்றனர் எனவும் இதனால் அவர்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் எனவும் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், தேர்தல்கள் நெருங்கும் போது மட்டுமே அரசியல்வாதிகள் தேசிய அடையாள அட்டை தொடர்பாக கூறி வாக்குகளைப் பெறுவார்கள் என்றும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தவறான முன்னுதாரணம் இது!

ஒரு செயலை ஆற்றியமையைச் சமாளிப்பதற்காக இன்னொரு தலைகீழ்ச் செயலை ஆற்றுவது சிலரின் வழமை.

சர்வதேச ஊடாட்டத்திலும் அப்படி நடக்கின்றதோ என்ற எண்ணத்தை ஜேர்மன் நாடு நமக்குத் தந்து நிற்கின்றது.

இலங்கை தொடர்பில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் கொண்டு வரப்பட்ட பிரேரணையை முன்நின்று நகர்த்தி, அதற்கு அனுசரணைப் பணி வகித்த நாடுகளுள் பிரதானமானது ஜேர்மனி.

மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும் அதனால் பாதிப்புற்ற மக்களின் அவல நிலை சம்பந்தமாகவும் ஜேர்மனிக்கு பட்டறிவு அதிகம். உலகின் ஏனைய நாடுகளை விட அந்தப் பேரவலத்தின் வலியை அதிகம் கண்டுணர்ந்த நாடு ஜேர்மனிதான். கடந்த நூற்றாண்டில் அந்த நாட்டின் தலைவராக இருந்த அடோல்வ் ஹிட்லரின் காலத்தில் கட்டவிழ்ந்த பல விடயங்களில் நன்கு அனுபவம் பெற்ற நாடு அது.

இன்று மனித உரிமைகள் குறித்து உலகம் சிரத்தை கொள்வதற்கான அவசியத்தை – தேவையை – முதலில் உருவாக்கியதே ஜேர்மனியில் கட்டுமட்டில்லாமல் கட்டவிழ்ந்த மனித உரிமை மீறல்களும், யுத்தக் குற்றங்களும், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்களும், இனவழிப்பும்தான். யூதர்களுக்கு எதிரான நாஸிகளின் இனப்படுகொலை – இனச் சுத்திகரிப்பு – பல பத்து லட்சம் அப்பாவிகளின் உயிர்களைக் காவு கொண்டது என்பது வரலாறு.

அந்த அனுபவப் பாடம் காரணமாக உலகெங்கும் இடம்பெறக் கூடிய இனவழிப்பு நடவடிக்கைகளை எதிர்த்துக் குரல் கொடுத்து, நீதியை நிலைநாட்டி, நியாயத்தைப் பெற்றுக் கொடுப்பதில் ஜேர்மனி ஈடுபாடு காட்டியே வருகின்றது.

அந்த வகையில் இலங்கை விடயத்திலும் ஜேர்மனி அதிகம் ஈடுபாடு காட்டியது. காட்டுகிறது. இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் பற்றிய விடயமும், அது தொடர்பான நீதி, நியாயமான விசாரணைகளும், பொறுப்புக்கூறல் நடைமுறையும் சர்வதேசக் கண்காணிப்புக்குள் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதில் அதிக ஈடுபாடு காட்டிய மேற்குலக நாடுகளில் ஜேர்மனியும் ஒன்று.

யுத்தக் காலத்தில் மட்டுமல்ல, அதற்குப் பின்னர் இப்போது வரை தொடரும் இத்தகைய நடவடிக்கைகள் தொடர்ந்தும் கண்காணிக்கப்பட வேண்டும் என்ற விடயத்தை இப்போதைய தீர்மானத்தில் முன்னின்று சேர்த்த நாடு ஜேர்மனிதான்.

அப்படியிருக்கையில், அந்த யதார்த்தப் புறநிலைமைக்கு மாறான ஒரு காரியத்தை அந்த நாடு முன்னெடுத்திருப்பது ஆச்சரியத்துக்குரியது.

ஜெனிவாவில் இலங்கை தொடர்பான பிரேரணையை அனுசரணைப் பணி வகித்துக் கொண்டு வந்த நாடுகளில் ஜேர்மனியும் பிரதானமானது என்பதால் ஜேர்மன் மீது இலங்கைக்கு இராஜதந்திரக் சீற்றம் இருப்பது வெளிப்படையானது.

அதனைச் சமாளிப்பதற்காகவோ என்னவோ, மறுபக்கத்தில் ஜேர்மனியில் அரசியல் புகலிடம் கோரிய நூற்றுக்கும் அதிகமான ஈழத் தமிழர்களை இலங்கைக்கு நாடு கடத்தும் அதிரடி நடவடிக்கையை – அதுவும் ஜெனிவாவில் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட கையோடே – ஜேர்மனி ஆரம்பித்திருக்கின்றது.

இது, ஒரு கையால் குட்டுப் போட்டு மறுகையால் அரவணைக்கும் சர்வதேச இராஜதந்திரமாக இருக்கலாம். ஆனால், இது நீதி, நியாயமாக நடக்கும் போக்கு அல்ல என்பது தெளிவானது.

இலங்கை மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டது, ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது என்ற சாரப்பட்ட பிரேரணைக்கு ஜெனிவாவில் அனுசரணைப் பணி வகித்து, முன்னின்று அதைக் கொண்டு வந்து தீர்மானமாக நிறைவேற்றச் செய்து கொண்டு, அந்த அரசாங்கத்திடமிருந்து தப்பி வந்து புகலிடம் கோருவோரை மீண்டும் அதே அரசாங்கத்தின் கரங்களில் ஒப்படைப்பதற்கு ஒரு வார காலத்திற்குள்ளேயே ஜேர்மனி முயலுகின்றமை முற்றிலும் எதிர்மாறான செய்தியைத் தெரிவிப்பதாக அமையும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்த விடயத்தைக் கடிதம் மூலம் ஜேர்மன் அரசுக்கு அவர் தெரியப்படுத்தியிருக்கின்றார். இது அவரின் நிலைப்பாடு மாத்திரமல்ல, ஒட்டுமொத்தத் தமிழினத்தினதும் கருத்துமாகும்.

ஜேர்மனியின் இந்தத் தவறான முன் உதாரணம் சுவிஸ், ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளையும் இவ்வழியில் நடக்கத் தூண்டி விடலாம்.

ஆகவே, ஜேர்மனி தனது தற்போதைய தவறான முடிவை மாற்றி, தன்னைத் திருத்திக் கொள்ள முன்வரவேண்டும். தன் முடிவை அந்நாடு உடனடியாக மீள் பரிசீலனை செய்ய வேண்டும்.

இது, தமிழினத்தின் கோரிக்கை.

# அரசுக்கு எவரும் அழுத்தம் பிரயோகிக்கவே முடியாது!



## வீரசேகர வீறாப்பு

கொழும்பு, மார்ச் 29

ஐ.நா.வில் முன்மொழியப்பட்டுள்ள தீர்மானத்தை செயற்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்துக்கு எவரும் அழுத்தம் பிரயோகிக்க முடியாது என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த நிகழ்வில் சரத் வீரசேகர மேலும் கூறியுள்ளவை வருமாறு -

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானம் குறுகிய அரசியல் நோக்கங்களுக்கானதாகும்.

மேலும் இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தம் தொடர்பாக ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களே முன்வைக்கப்பட்டுள்ளன.

ஆகவே, இலங்கைக்கு எதிராக தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை செயற்படுத்த வேண்டிய அவசியம் கிடையாது.

அத்துடன் இந்த விடயத்தில் எவரும் இலங்கைக்கு அழுத்தம் பிரயோகிக்க முடியாது.

ஆகவே, ஐ.நா. தீர்மானம் தொடர்பாக மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. - என அவர் குறிப்பிட்டுள்ளார்

# பெரும்பான்மையினர் வாழும் பிரதேசமாக கிழக்கைக் காட்ட அரசு கடும் முயற்சி!

## சாணக்கியன் காட்டம்

அம்பாறை, மார்ச் 29

கிழக்கு மாகாணத்தை பெரும்பான்மையினர் வாழும் பிரதேசமாக காட்டுவதற்கே அரசாங்கம் முயற்சிக்கின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை - கல்முனை பகுதியில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த நிகழ்வில் இரா.சாணக்கியன் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

நான் எப்போதும், தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள், ஒற்றுமையாக வாழவேண்டும் என்ற எண்ணம் கொண்டவன்.

அந்தவகையில் அண்மையில் திருகோணமலைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த வேளையில், ஒருவர் என்னிடம் கூறினார், வடக்கில் 20 வருடங்கள் கடந்த பின்னர் அப்பா, அம்மா என்றுதான் அழைப்பார்கள்.

அதேபோன்று கிழக்கு மாகாணத்தில் வாப்பா, உம்மா என்று அழைக்கும் நிலைமை ஏற்படும் என குறிப்பிட்டார்.

இதன்போது நான் அவரிடம் கூறினேன்,



கிழக்கு மாகாணத்தில் 10 அல்லது 15 வருடங்களை கடந்த பின்னர் அப்பா, அம்மா என்பதும் இல்லை வாப்பா, உம்மா என்பதும் இல்லாமல் போய் தாத்தே, அம்மே என்று தான் அழைப்பார்கள்.

இதற்கு காரணம், கிழக்கு மாகாணத்தை தமிழ் மக்கள் வாழும் பிரதேசம் என்பதை மாற்றி பெரும்பான்மையினர் வாழுகின்ற பிரதேசமாக காட்டுவதற்கே அரசாங்கம் முயற்சிக்கின்றது. - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழரசு மட்டு வாலிபர் முன்னணியை சந்தித்தனர் சுமந்திரன், சாணக்கியன்!



மட்டக்களப்பு, மார்ச் 29

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு வாலிபர் முன்னணியினருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சாணக்கியன் ஆகியோருக்கு இடையில் நேற்று (சனிக்கிழமை) கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடல், வாலிபர் முன்னணியின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் லோ.தீபாகரன் தலைமையில் களுவாஞ்சிக்குடியில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணித் தலைவரும் கோரளைப்பற்றுப் பிரதேச சபை உறுப்பினருமான கி.சேயோன் உட்பட வாலிபர் முன்னணியின் மட்டக்களப்பு நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

இதன்போது சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதுடன், எதிர்வரும் தேர்தலுக்கு முகங்கொடுத்தல், ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட இலங்கை குறித்தான தீர்மானம், தற்போதைய அரசியல் நிலைமைகளில் தேசியம் சார்ந்து இளைஞர்களின் வகிபாகம் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏப்ரல் குண்டு தாக்குதலை அடிப்படையாகக்கொண்டு முஸ்லிம்களை அடிப்படை வாதத்துக்குள் தள்ளாதீர்

## முஜிபுர் ரஹ்மான் வேண்டுகோள்

கொழும்பு, மார்ச் 29

நாட்டில் ஒரு சட்டம் என்றால் இந்திய பிரஜைக்கு ஒரு சட்டமும் அசாத் சாலிக்கு வேறு சட்டமும் இடம்பெற முடியாது. அத்துடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகளான சாராவை இலங்கைக்கு அழைத்துவர இந்திய அரசாங்கத்திடம் இதுவரை ஏன் எவ்வித கோரிக்கையும் அரசாங்கம் முன்வைக்க வில்லை என முஜிப்புர் ரஹ்மான் கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்ற ஏப்ரல் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு வின் விசாரணை அறிக்கை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையி லேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக் கையில் -

உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழு வின் அறிக்கையில் தாக்குதல்கள் இடம் பெறுவதற்கு முன்னர் கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவல்கள், தாக்குதல்கள் நடத்தப்பட்டவிதம், திட்டமிடப்பட்டமை மற்றும் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் தொடர்பிலான நபர்கள் குறித்து ஒருபுறம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதும் ஆணைக்குழுவின் அறிக்கையின் மூலம் சஹ்ரானின் பின்புலம், அவருக்கு உதவிகளை செய்த வர்கள் மற்றும் அவரை வழிநடத்தியவர் கள் யாரென அனைவரும் எதிர்பார்த்தி ருந்தோம். ஆனால், ஆணைக்குழுவின் அறிக்கையில் அவ்வாறான தகவல்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

என்றாலும் ஆணைக்குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சில விடயங்களைத் தொடர்புபடுத்துவ தன் மூலம் சில தெளிவுகளை பெற்றுக் கொள்ள முடியும். ஆணைக்குழுவின் அறிக்கையில் 251 ஆவது பக்கத்தில் சாய்ந்தமருதுவில் குண்டுவெடிப்பு இடம் பெற்றமை தொடர்பில் சாட்சியமளித் துள்ள சஹ்ரானின் மனைவி, குறித்த குண்டு வெடிப்பு இடம்பெற்ற சந்தர்ப்பத் தில் சாராவின் குரல் தனக்கு கேட்டதாக வும் அவர் உயிருடன் இருந்துள்ளார் எனவும் கூறியுள்ளார்.

ஆணைக்குழுவின் அறிக்கையிலும் சாராவின் தாயின் டி.என்.ஏ பரிசோதனை யின் பிரகாரம் சாரா உயிருடன் இருந் துள்ளதாக கூறப்பட்டுள்ளது. அவ்வாறெ னின் குண்டுவெடிப்பு இடம்பெற்ற சாய்ந்த மருதுவில் இருந்து சாரா இந்தியாவுக்கு தப்பிச்செல்லும் வரை அவருக்கு உதவி புரிந்தது யாரென்ற பிரச்சினை எமக் குள்ளது. இதுதொடர்பாகவும் விசாரணை இடம்பெறவேண்டும்.

மேலும் அண்மையில் குளியாப்பிட்டி யவில் புத்தர் சிலை ஒன்றுக்கு சேதம் ஏற் படுத்திய குற்றச்சாட்டில் இந்திய பிரஜை ஒருவர் கைதுசெய்யப்பட்டார். ஆனால் அவரை குற்றப்புலனாய்வு பிரிவு தடுத்து வைத்து விசாரிக்காமல் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியதால் அவருக்கு பிணை வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அஸாத் சாலி தெரிவித்த ஒரு கருத்தை அடிப்படையாகக்கொண்டு அவரை குற்றப்புலனாய்வு பிரிவு தடுத்து வைத்து விசாரித்து வருகின்றது. நாட்டில் ஒரு சட்டம் என்றால் இந்திய பிரஜைக்கு ஒரு சட்டமும் அஸாத் சாலிக்கு வேறு சட்டமும் இடம்பெற முடியாது.

அதேபோன்று இந்தத் தாக்குதலை அடிப்படையாக்கொண்டு மத்ரசாக்களை தடைசெய்யவேண்டும். புர்காவை தடை செய்யவேண்டும். அரபு மொழியை தடைசெய்யவேண்டும் என்று பொலி ஸுக்கு பொறுப்பான அமைச்சர் தெரி வித்து வருகின்றார். சஹ்ரான் மத்ரசா வில் பூரணமாக கற்கவில்லை. அவரு க்கு அரபு மொழி தெரியுமா என்று எனக்கு தெரியாது. அதேபோன்று சஹ்ரானின் மனைவி புர்கா அணியவும் இல்லை. சஹ்ரான் செய்யாத விடயங்களையே அரசாங்கம் தடைசெய்யப்பார்க்கின்றது.

எனவே இலங்கையில் 20 லட்சம் முஸ்லிம்கள் இருக்கின்றனர். அவர்க ளில்விரல்விட்டுஎண்ணக்கூடியவர்களே இந்த தாக்குதலுடன் சம்பந்தப்பட்டிருக் கின்றனர். அந்த விரல் விட்டு எண்ணக் கூடியவர்களுக்காக ஒட்டுமொத்த முஸ் லிம் சமூகத்தையும் அழுத்தத்துக்குள் ளாக்கவேண்டாம்.

இதன் மூலம் சஹ்ரானின் அடிப்படை வாதத்துக்கு பதிலாக மேலுமோர் அடிப்ப டைவாதத்துக்கு இடமளிக்கவேண்டாம். அரசாங்கத்தில் இருக்கும் அடிப்படைவாதி கள் தங்களுடன் இருக்கும் இனவாதி களை திருப்திப்படுத்தவே இவ்வாற நடவடிக்கைகளை மேற்கொண்டுவரு கின்றனர். - என்றார்.

# பசறை பஸ் விபத்தில் அநாதரவாகியுள்ள பிள்ளைகளை யாரிடமும் வழங்கோம்!

## உறவினர்கள் விடாப்பிடி

பசறை விபத்தில் பெற்றோர்களை இழந்த மூன்று பிள்ளைகளையும் பொறுப்பேற்க, தான் தயாராக இருக்கிறார் என அம்பாறை அர சாங்க வைத்தியசாலை வைத்திய நிபுணர் வஜிர ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

மூன்று பிள்ளைகளையும் அந்தப் பிள் ளை களின் பாதுகாவலர்கள் என்னிடம் ஒப்ப டைக்க விருப்பம் தெரிவிப்பார்களேயானால், அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள் வேன்.

இம் மூன்று பிள்ளைகளையும் இணைத் துக்கொண்டு, எனது குடும்பத்தை பெரிதாக் கவே விரும்புகின்றேன். இந்தப் பிள்ளைகள் மூவரது வருகையை எனது குடும்பத்தினர் மிகுந்த ஆவலுடன் எதிர்ப்பார்த்துள்ளனர்.

இந்தப் பிள்ளைகளை விரைவில் சந்திக் கவுள்ளேன். மனிதாபிமான முறையிலேயே நான் செயற்படுகின்றேன். இன, மதம், ஜாதி எதனையும் நான் பார்ப்பவனல்லன். இந்தப் பிள்ளைகளை பிரிக்க நினைக்கவில்லை. மூன்று பேரையும் ஒன்றாக வளர்க்கவே விரும்புகின்றேன். அந்தப் பிள்ளைகள் தனது பாட்டியை விட்டு வர விரும்பாத பட்சத்தில், அவர்கள் பெரியவர்களாகும் வரை, அவர்க ளுக்கான உதவிகளை வழங்க எதிர்ப்பார்க் கின்றேன். - என்றும் கூறினார்.

ஆனால், மூன்று பிள்ளைகளின் பாட்டியும், உறவினர்கள் அனைவருமே 'அப்பிள்ளை களை எக்காரணம் கொண்டு எவருக்கும் வழங்க அனுமதிக்கப்போவதில்லை. உதவி கள் செய்பவர்கள் இருப்பின், அவர்கள் தாராள மாக உதவிகளை வழங்கலாம். பிள்ளைகளின் பெற்றோரின் கனவை நன வாக்கும் வகை யில், பிள்ளைகளை நன்றாகப் படிக்க வைத்து, அவர்களின் எதிர்கால வாழ்க்கையை வளம் பெற வைப்பதே எமது இலட்சியம்" - என்று உறுதியாகக் கூறுகின்றனர்.

# கலப்பு முறையில் மாகாணசபைத் தேர்தல் நடத்தத் திட்டமிடுகின்றது அரசுத் தரப்பு

விகிதாசார பிரதிநிதித்துவம் மற்றும் கடந்த தேர்தல் முறை ஆகியவற்றின் கலவை யு டன் மாகாண சபை தேர்தலை நடத்துவதற் கான அங்கீரத்தை அமைச்சரவை கோரியுள் ளது.

எவ்வாறாயினும், எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில அதை ஆராய்ந்து பரிந்து ரைகளைக் சமர்ப்பிக்க அதிக நேரம் கோரிய மையைத் தொடர்ந்து, உத்தேச சட்டத்திற்கான அமைச்சரவை அனுமதி ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

ஆகவே சட்டரீதியான தடைகளைத் தீர்த்த பின்னர் மாகாண சபைகளுக்கான தேர்த லைத் தாமதமாக நடத்த அரசாங்கம் தீர்மா னித்துள்ளது.

கடந்த அரசாங்கம் மாகாண சபைகளின் தேர்தல் சட்டத்தில் திருத்தம் வடிவில் ஒரு புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தியது.

குறித்த பரிந்துரையின்படி, விகிதாசார பிரதி நிதித்துவத்தின் கீழ் 50 சதவீத உறுப்பினர் களைத் தேர்ந்தெடுக்க கலப்பு முறையின் கீழும் மீதமுள்ளவை கடந்த முறையின் கீழும் இடம்பெறும்.

இருப்பினும், டிலிமிட்டேன் செயல்முறை ஒரு சட்டபூர்வமான சிக்கலை கொண்டுவந் துள்ள நிலையில் தற்போதைய சட்டத்தின் அடிப்படையில் வாக்கெடுப்பை நடத்துவது சாத்தியமில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள் ளது.

அதன்பிரகாரம் குறித்த விடயத்தை திருத் துவதற்கும் புதிய சட்டத்தை கொண்டுவரவும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் கடந்த வாரம் ஒரு புதிய அமைச்சரவை பத்தி ரத்தை சமர்ப்பித்தார்.

குறித்த அமைச்சரவை பத்திரத்தின் பிரகா ரம், 70 சதவீத உறுப்பினர்கள் கடந்த கால தேர்தல் முறையின் கீழும் தபால் மூல வாக்க ளிப்பு உட்பட மிகுதி நடவடிக்கையை விகிதா சார முறைப்படியும் நடத்த பரிந்துரைக்கப் பட்டது.

மாகாண சபைகளை அமைத்து அதன் மூலம் உள்ளூராட்சி நிர்வாகத்தை வலுப்ப டுத்த வேண்டும் என இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்டுள்ள ஐ.நா. தீர்மானம் கோரும் அதேவேளை அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்த இந்தியாவும் வலியுறுத்துகிறது.

இருப்பினும், சில ஆளும் கட்சி உறுப்பினர் கள் 13 ஆவது திருத்தம் ஊடாக அதிகாரப் பகிர்வை வழங்கக் கூடாது எனக் கருத்து தெரி வித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




## காண்போம்

தவக்காலத்தின் புனித வாரத்துள் எமது ஆன்மீக பய ணங்கள் அர்த்தமூட்டும் வழிபாடுகளை வாழ்வாக்க பிறர் நட்பு உறவுகளை குறை நிறைகளுடன் ஏற்று வாழும் மனநிலையை மாற்றும் செயல்களால் எமது ஆன்மீகத்தை புதுப்பிக்க அழைக் கப்படுகிறோம்.

பிறர் குற்றவாழிகள் என தீர்ப்பீடாதீர்கள். அப்போதுதான் நீங் களும் தீர்ப்புக்குள்ளாகமாட்டிர்கள். மற்றவர்களை கண்டனம் செய்யாதீர்கள். அப்போது தான்றங்களும் கண்டனத்துக்கு உள்ளாக மாட்டிர்கள். மன்னியுங்கள், மன்னிப்பு பெறுவீர்கள், கொடுங்கள் உங்களுக்கு கொடுக்கப்படும், அமுக்கி குலுக்கி உங்களுக்கு கொடுக்கப்படும். என்ற இறைவார்த்தைகள் இக் காலத்தில் எமது வாழ்வில் வெளிப்படுத்துவதே எமது தவத்தின் அடையாளமாகட்டும்.

தவத்தின் புனித வாரம் இது வரை நாம் தவக்காலத்தில் மேற்கொண்ட செபதப தானங்கள் மேலும் பலமுறை என் முன்னே காணும் சிறுவர் முதியோர் இளையோர் மட்டில் கூடிய கரிசனை கொண்டு இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பின் புனிதத்தை பகிர்ந்து ஆன்மீக வழிகாட்டிகளாக மாற்றும் செய்ய சந்தர்ப்பங்களை ஏற்படுத்துங்கள் நீங்கள் மட்டும் இறைபற் றலை பயணிப்பதைவிட இன்றும் அன்னியமாக வழிகாட்ட லின்றி ஒதுங்கும், தனிமைப்படுத்தப்படும் விவரம் புரியாது வாழ்வோரிடமும் அக்கறை கொள்ளுங்கள்.

பல நோய் நொடிகளால் துன்புறுவோரும் நோய்க்கு பயந்து பயந்து விரக்தி உறுவோரும் எம் அயலில் காணப்படும் துன்புறுவோருடன் உங்கள் உதவிக்கரங்கள் ஆறுதல் அழிக் கும் ஒவ்வொரு செயலும் இறை வழிபாடுகளே.

உங்கள் அயலில் தனிமையில், நோய் நொடிகளால் உணவு வின்றி, உறவாடல் இன்றி பயமுற்று வாழும் மனித உறவுகளை தேடிச் சென்று உதவும் ஒவ்வொரு செயலும் தவப் பயணத்தின் முக்கியமான பணிகளே!

உங்கள், விரதங்கள் ஒறுத்தல்கள் உபவாசங்கள் யாவும் பிறர் ஆறுதலுக்கான உதவிக் கரம் நீட்டும்போது தான தர்ம செயல்கள் தவக்கால பகிர்தலாக இறைசன்நிதிவளர எடுக் கும் சிலுவை பயணத்தை பயனுள்ளதாகக் தவப்பயணத்தை புனித வாரத்தில் புதிய பாதை அமைப்போம்.

– கலாபூசணம் யோசப்பாலா –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# உலகம் சுற்றுகிறது தீர்மானம்! தலையை சுற்றுகிறது அறிக்கைகள்



- பனங்காட்டான் -

போர்க்குற்றம், பொறுப்புக்கூறல், சர்வதேச நீதிவிசாரணைப் பொறிமுறை என்ற ஜெனிவா அம்சங்களில் எதையுமே குறிப்பிடாத இந்தியா, வழமையான 13 தாலாட்டையே இங்கும் பாடிவிட்டு ஜெனிவாவிலிருந்து தப்பிவிட்டது.

முள்ளிவாய்க்கால் உறைநிலைக்குச் சென்ற பின்னர் போர்க்குற்றம் தொடர்பான ஆவணங்கள், வாய்மூலங்கள், சத்தியப்பிரமாணங்கள் தமிழர் தரப்பால் பல நாடுகளில் சேகரிக்கப்பட்டன. இன்னும் தொகுக்க வேண்டியவை நிறைய உண்டு. இவற்றைத் தாமதமின்றிச் சேகரித்து மனித உரிமை ஆணையாளரிடம் கையளிக்க வேண்டிய காலம் உருவாகியுள்ளது. இதனைச் செய்யத் தவறின் 46:1அர்த்தமில்லாது போய்விடும். 2022 செப்டம்பரில் ஜெனிவாக் கதவும் மூடும் நிலை ஏற்படலாம்.

ஒரு மாதத்துக்குள் மூன்று நான்கு சிறுசிறு திருத்தங்களுக்குட்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானம், ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இந்த மாதம் 23 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது.

பேரவையின் ஆணையாளர் மிச்சேல் பச்சிலட் அவர்களின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட அத்தனை அம்சங்களும் தீர்மானத்தில் இடம்பெறவில்லை. ஆனால், இலங்கை அரசு அடியோடு விரும்பாத சில விடயங்கள் இறுதி வரைவில் இணைக்கப்பட்டன.

இந்தத் தீர்மானத்தையொட்டி சமூக ஊடகங்களில் இடம்பெறும் தவறான இரண்டு சொற்பதங்களை முதலில் நோக்க வேண்டும். இலங்கைக்கு எதிரான தீர்மானம், வாக்களிப்பு வெற்றி பெற்றது - இவ்விரு சொற்பதங்களுமே இங்கு கரிசனைக்குட்பட்டவை.

தீர்மானத்தை முன்மொழிந்த பிரித்தானிய அரச பிரதிநிதி தமது உரையின் ஆரம்பத்திலேயே, இது இலங்கைக்கு எதிரான தீர்மானம் அல்ல என்று அழுத்திக் குறிப்பிட்டார்.

சமூக ஊடகங்களில் குறிப்பிடுவதுபோல, இலங்கைக்கு எதிரான தீர்மானம் என்றால், இதனை தாங்கள் ஏற்கவில்லையென்றும், முழுமையாக நிராகரிப்பதாகவும்இலங்கைத்தரப்புகூறுவதைஏற்றுக்கொள்ள நேரிடும். எனவே, இலங்கைக்கு எதிரான தீர்மானம் என்பது தவிர்க்கப்பட வேண்டியதும் உண்மைக்குப் புறம்பானதும்.

அடுத்தது, தீர்மானம் வெற்றி என்பது முற்றிலும் தவறான சொற்பதம். வெற்றி தோல்வி சொல்வதற்கு இது தேர்தல் அல்ல. சர்வதேச அரங்கில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானம் பெரும்பான்மையால் நிறைவேறியது என்று குறிப்பிடுவதே பொருத்தமாகும்.

இத் தீர்மானத்தை நிராகரிப்பதாகக் கூறினாலும், சர்வதேச நியமங்களுக்குட்பட்டு இதனை அமல் செய்யும் கடப்பாடு இலங்கைக்கு (விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்) உள்ளது.

இந்தப் பின்னணியில் ஜெனிவா விடயங்களை அணுகுவதே இன்றைய பத்தியின் நோக்கம். தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னைய சில நாள்களாக இலங்கையைத் தளமாகக்கொண்ட இரு தரப்பும் ஏட்டிக்குப் போட்டியாக ஒரு கருத்தை வெளியிட்டு வந்தன.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர், அமைச்சின் செயலாளர் உட்பட கோட்டாபய தரப்பு அரசியலாளர்கள் இந்தியா தீர்மானத்தை எதிர்த்து வாக்களிக்குமென மீண்டும் மீண்டும் கூறி வந்தனர். இதனூடாக இந்தியாவை அவ்வாறு செய்யத் தூண்டும் ஒரு செயற்பாடாகவும் காணக்கூடியதாக இருந்தது.

ஆனால், தமிழர் தரப்பில் கூட்டமைப்பின் பிரதிநிதி சுமந்திரன், தீர்மானத்தை இந்தியா ஆதரித்து வாக்களிக்குமென அதீத நம்பிக்கை வெளியிட்டு வந்தார். இந்தியத் தரப்பு இரகசியமாக தமக்கு இதனைக் கூறியதுபோன்று இவர் கருத்துக் கூறிய பாணி தென்பட்டது.

சில பொதுவான தரப்புகள் இந்தியா வாக்களிப்பில் கலந்து கொள்ளாதென கூறிவந்தனர். வாக்களிப்பு இடம்பெறுவதற்கு ஒரு மணித்தியாலத்துக்கு முன்னர் கூட இந்தியா தனது நிலைப்பாட்டை நேரடியாக வெளிக்காட்டவில்லை. ஜெனிவாவில் இந்தியப் பிரதிநிதி உரையாற்றும்போது பூனை சாக்குக்கு வெளியே வந்தது.

இந்தியா இரு தரப்பையும் நம்ப வைத்து ஏமாற்றிக் கைவிட்டபோதிலும், இரு தரப்பும் அதை தங்களுக்குச் சாதகமாக மாற்றிக்கொண்ட அரசியல் சித்து விளையாட்டை என்னென்று சொல்லலாம்? இந்திய விவகாரத்தில் வழமையான அரசியல் பம்மாத்து ஆரம்பமானது. இதில் முக்கியமானது இந்தியா நடுநிலைமை வகித்தது என்று இரு தரப்பும் சொல்லிக் கொண்டமை. இதனாற்போலும் இரு தரப்புமே சமவேளையில் இந்தியாவுக்கு நன்றி தெரிவித்து அறிக்கைகள் விட்டன.

இலங்கை அரச சார்பில் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இந்தியாவுக்கு வாக்களிப்பில் பங்குபற்றாமைக்கு நன்றி கூறினார். கூட்டமைப்பின் சுமந்திரன் மூன்று காரணங்களை முன்வைத்து இந்தியாவுக்கு நன்றி கூறினார்.

தமிழ்மக்களுக்குஆதரவாகஇந்தியாசெயற்பட்டது, பதின்மூன்றாம் திருத்தத்தின் பிரகாரம் அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வைக் கோரியது, மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு வேண்டியது என்பவற்றுக்காக இந்தியாவுக்கு நன்றி என்றார் இவர்.

சுமந்திரனின் நன்றி போதாது என்று எண்ணியோ என்னவோ, கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் தமது பங்குக்கு ஓர் அறிக்கை வெளியிட்டார். ஜெனிவாவில் இந்தியா குறிப்பிட்ட விடயங்களை இலங்கை அரசு முழுமையாக செயற்படுத்த வேண்டுமென்பது இவரது அறிக்கை.

போர்க்குற்றம், பொறுப்புக்கூறல், சர்வதேச நீதி விசாரணைப் பொறிமுறை என்ற ஜெனிவா அம்சங்களில் எதையுமே குறிப்பிடாத இந்தியா, வழமையான 13 தாலாட்டையே இங்கும் பாடிவிட்டு ஜெனிவாவிலிருந்து தப்பி விட்டது. ஜெனிவாவுக்கும் 13க்கும் எந்தச் சம்பந்தமும் இல்லையென்பது சம்பந்தனுக்குக் கூட புரியவில்லை.

முள்ளிவாய்க்கால் பேரழிவுக்கு முன்னின்று இலங்கைக்கு உதவி வழங்கிய 32 நாடுகளில் முதன்மையானது இந்தியா. ஆயுதம், இராணுவம், புலனாய்வு, காட்டிக்கொடுப்பு, வக்காலத்து என்று சகல வளங்களையும் இந்தியா தந்ததென்று இலங்கை எத்தனை தடவை குறிப்பிட்டிருக்கும்!

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஜெனிவா தீர்மானத்தின் வழியாக இந்தியாவை காப்பாற்றிவிட்டது என்று குற்றம் சுமத்தியுள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரனிடமிருந்து இதுவரை எதுவும் வரவில்லை. ஆற அமர்ந்து கேள்வி - பதில் வடிவில் இன்னொரு கோணத்தில் இவரது அறிக்கை நிச்சயமாக வெளிவரும்.

மூவேந்தர்களான சேர, சோழ,பாண்டியர்கள் தங்களுக்குள் மோதுப்பட்ட வரலாறை, இன்று தமிழீழ மண்ணில் மூன்று தமிழ்த் தேசிய கட்சிகளும் பின்பற்றும் கைங்கரியம் இடம்பெறுகிறது.

இன்றைய நிலையில் ஆகக்குறைந்தது தமிழர் நிலம், தமிழர் உரிமை, தமிழர் எதிர்காலம் என்ற அடிப்படையில் இவர்கள் மூவரும் இணைந்து செயற்படாதவிடத்து இலங்கைக்கு வெற்றி மேல் வெற்றியே கிடைக்கும்.

ஜெனிவா தீர்மானம் நிறைவேற்றல் தொடர்பான அதிசயக் கணக்கொன்றை இலங்கை அரசு வெளியிடுமென எதிர்பார்த்தது பொய்யாகவில்லை. 47 நாடுகளில் 22 தீர்மானத்தை ஆதரித்தன. 11 எதிர்த்தன. 14 வாக்களிப்பில் பங்கேற்கவில்லை. தீர்மானம் 11 வாக்குகளால் நிறைவேறியதென அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

நாங்கள் அறிந்த எண்கணிதம், அட்சரகணிதம், கேத்திரகணிதம், மனக்கணிதம் என்பவற்றுக்கு அப்பால் அரசியல்கணிதம் என்றும் ஒன்று இருப்பதை இலங்கை அறியத்தந்துள்ளது. அதாவது, 47 நாடுகளில் 22 மட்டுமே தீர்மானத்தை ஆதரித்ததால் 25 நாடுகள் தீர்மானத்தை ஆதரிக்கவில்லை என்பதே கோட்டாபய தரப்பின் அரசியல் கணக்கு. எத்தனை காலம்தான் சிங்களச் சனங்களை இப்படி ஏமாற்றப் போகிறார்களோ?

ஜெனிவாவில் இப்போது நிறைவேற்றப்பட்ட தீர்மான இலக்கம் 46/1. இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகளை ஊக்குவித்தல் என்பது இதன் தலைப்பு வாசகம்.

2015ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை இலங்கை அரசுகள் அலட்சியப்படுத்தி வந்தமையினாலேயே புதிய தீர்மானம் வந்தது என அமெரிக்க தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ் சுட்டியுள்ளார்.

தங்கள் நாட்டினால் இணைஅனுசரணை வழங்கிய பொறுப்புக்கூறலை, அது வேறு அரசு (மைத்திரி - ரணில்), இது வேறு அரசு (ராஜபக்ஷக்கள்) என்று காரணம் கூறித் தீர்மானத்தை இலங்கை அரசு நிராகரிக்கிறது. போர்க்குற்றம் இடம்பெற்ற காலத்தில் ஜனாதிபதியாக இருந்தவர் மகிந்த ராஜபக்ஷ. போர்க்குற்றம் புரிந்த இராணுவத்தினரையும் படையினரையும் வழிநடத்தியவர் அப்போது பாதுகாப்புச் செயலாளராகவிருந்த தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

எனவே, பொறுப்புக்கூறல் மற்றும் சர்வதேச நீதி விசாரணைப்பொறிமுறைகளை நிறைவேற்ற வேண்டிய தார்மிகப் பொறுப்பு ராஜபக்ஷக்களுக்கே உண்டு. இதனை மேலும் விளக்கமாகக் கூறுவதானால், ராஜபக்ஷக்களையே முதலில் குற்றவியல் விசாரணைக் கூண்டில் ஏற்ற வேண்டும். இதனைத் தெரிந்து கொண்டதால்தான் இவர்கள் இத்தீர்மானத்தை முழுமையாக நிராகரிக்கின்றனர்.

இப்போது நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் இரு விடயங்கள் பல தரப்பினரதும் ஆழ்ந்த கவனத்தைப் பெற்றுள்ளன. தொடர்ந்து இடம்பெறும் மனித உரிமை மீறல்கள், சட்டத்துக்குப் புறம்பான செயற்பாடுகள் விசாரிக்கப்பட வேண்டும். இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக தகவல் மற்றும் ஆதாரங்களைச் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல், பாதுகாத்தல், பொறுப்புக்கூறல் செயல்முறைகளுக்கான சாத்தியமான உத்திகளை உருவாக்குதல் என்பவை மனித உரிமை ஆணையாளரிடம் அதிகாரபூர்வமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதற்கென 12 அதிகாரிகளை ஈடுபடுத்த 2.8 மில்லியன் டாலர்களை ஜெனிவா பேரவை வழங்குகிறது. இவ்வருடம் செப்டம்பரில் வாய்மூல அறிக்கையொன்றினை ஆணையாளர் பேரவையில் சமர்ப்பிக்க வேண்டும். அடுத்த ஆண்டு மார்ச், செப்டம்பர் அமர்வுகளில் உறுப்பு நாடுகளின் விவாதத்துக்கென பூரண அறிக்கையை ஆணையாளர் சமர்ப்பிக்க வேண்டும்.

ஆணையாளர் பச்சிலட் அவர்கள் சிலி நாட்டின் ஜனாதிபதியாக இரு தடவை பணியாற்றிய மனித உரிமை செயற்பாட்டாளர். இவரது தந்தை சிறையில் கொல்லப்பட்டவர். இவர் பல தடவை சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டவர். இதனால் நாட்டை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் மறைவு வாழ்க்கை வாழ்ந்தவர். போர்க்குற்றம், மனித உரிமை மீறல், காணாமலாக்கப்படுதல், சித்திரவதை என்பவைகளை அனுபவத்தால் பெற்றவர். எனவே நேர்மையான நீதியை இவரிடம் எதிர்பார்க்க முடியும்.

ஆனால், இப்பணியை இவரது அலுவலகத்தால் தனித்து செய்துவிட முடியாது. தாயகத்திலும் புலத்திலும் வாழும் தமிழர்கள் இப்பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்த வேண்டும். முள்ளிவாய்க்கால் உறைநிலைக்குப் பின்னர் உலகின் பல நாடுகளில் (கனடா உட்பட) போர்க்குற்றங்கள் தொடர்பான வாய்மூலங்கள், சத்தியப் பத்திரங்கள், ஆவணங்கள் சேகரிக்கப்பட்டன. இவை அனைத்தும் ஒன்றிணைக்கப்பட்டு ஜெனிவாவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

ஜெனிவா தீர்மானம் உலகம் சுற்றி வருகிறது. தமிழ் அரசியல்வாதிகள் தலையைச் சுற்றும் அறிக்கைகளைவிட்டுதங்களைப்பிரபல்யப்படுத்துகிறார்கள். இன்றைய தேவை ஜெனிவாவுக்கான தகவல் சேகரிப்பும் ஆவணப்படுத்தலும், உரிய வேளையில் ஒப்படைப்பதுமே. இதனைச் செய்யத் தவறின் 461 அர்த்தமில்லாது போய்விடும். 2022 செப்டம்பருடன் ஜெனிவாக் கதவும் மூடப்படும் நிலை ஏற்படலாம்.

**நன்றி : 'பதிவு' இணையம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்களை இலக்கு வைத்து நாடு கடத்தாதீர்கள்

## ஜேர்மன் அரசுக்கு கஜேந்திரகுமார் கடிதம்



யாழ்ப்பாணம், மார்ச் 29

ஜேர்மனிக்கு பெருமளவில் சென்று அடைக்கலம் கோரியுள்ள தமிழ் புகலிடக்கோரிக்கையாளர்களை இலங்கைக்கு நாடுகடத்த உள்ளதாகத் தகவல் வெளிவந்துள்ளது.

இவ்வாறு நாடு கடத்தும் திட்டத்தை ஜேர்மன் அரசாங்கம் உடனடியாகக் கைவிடவேண்டும் என தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜேர்மன் அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு -

மார்ச் 30 ஆம் திகதி புகலிடக்கோரிக்கையாளர்களான பெருமளவு இலங்கை தமிழர்களை இலங்கைக்கு நாடு கடத்துவதற்கு ஜேர்மன் அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அறிந்து நாங்கள் பெரும் மனக்கலக்கம் அடைந்துள்ளோம்.

ஜேர்மனியில் உள்ள தமிழ் சமூகத்திற்கு இது ஏற்படுத்தக்கூடிய வேதனை அச்சங்களுக்கு அப்பால் இலங்கையில் இடம்பெற்ற, இடம்பெற்றுக்கொண்டிருக்கின்ற மனித உரிமை மீறல்களிற்கு தீர்வை காண்பதற்கான சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைகள் மீதும் இது கடும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஜேர்மனி ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைமனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக தெரிவிக்கும் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கிய ஒருவாரகாலத்திற்குள் அந்த அரசாங்கத்திடமிருந்தே புகலிடம் கோரும் புகலிடக்கோரிக்கையாளர்களை அந்த அரசாங்கத்தின் கரங்களில் ஒப்படைப்பதற்கு ஜேர்மனி முயல்கின்றமை முற்றிலும் எதிர்மாறான செய்தியைத் தெரிவப்பதாக அமையும்.

இதன் காரணமாக புகலிடக்கோரிக்கையாளர்களின் உயிர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய இந்த தவறான முடிவை உடனடியாக மீள் பரிசீலனை செய்யுமாறு ஜேர்மன் அரசாங்கத்தை கோருகின்றேன் என அவர் தெரிவித்துள்ளார்.

# நீதித்துறை மீது மக்கள் நம்பிக்கை இழக்கலாம்

## அதன் அமைச்சர் வேதனை

கொழும்பு, மார்ச் 29

உலக நாடுகளில் இணையவழி நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற போதிலும், இலங்கையில் இன்னமும் அடிக்கடி வழக்குகள் பிற்போடப்படும் நிலையே தொடர்கின்றது.

இது நாட்டின் நீதித்துறை மீது மக்கள் நம்பிக்கையிழப்பதற்கே வழிவகுக்கும் என்று நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

2021/2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் உறுப்பினர்கள் உத்தியோகபூர்வமாகப் பதவியேற்கும் நிகழ்வும் முதலாவது கூட்டமும் கடந்த சனிக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

அந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு -

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பக்கச்சார்பும் அச்சமுமின்றி செயற்படும் அதேவேளை, அதன் சுயாதீனத் தன்மை தொடர்ந்து பேணப்படும் என்றும் நம்புகின்றேன்.

நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மை மற்றும் இறையாண்மை என்பன சட்டத்தரணிகள் சங்கத்தின் சுயாதீனத்தன்மையில் தங்கியுள்ளன.

அதுமாத்திரமன்றி சட்டத்தின் ஆட்சி, நீதி நிர்வாகம், சுயாதீன நீதித்துறை, மனித உரிமைகள் பாதுகாப்பு ஆகிய விடயங்களிலும் சட்டத்தரணிகள் சங்கத்தின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும்.

எமது நாடு சர்வதேச தரம்வாய்ந்த சட்டத்தரணிகளை உருவாக்கியிருக்கிறது. எனினும் தற்போதும் விசாரணைகள் முடிவடைந்து, தீர்ப்பு வழங்கப்படாமல் பெரும் எண்ணிக்கையான வழக்குகள் உள்ளன.

இந்த நிலைமை நாடு என்ற ரீதியில் நாம் முன்நோக்கிச் செல்வதற்கு பெரும் சவாலாக உள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடியைத் தொடர்ந்து அமெரிக்காவில் இணையவழி நீதிமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டமையுடன் தற்போது அவை மேலும் விரிவாக்கப்பட்டிருக்கின்றன இரவுநேர நீதிமன்ற நடவடிக்கைளும் முன்னெடுக்கப்படுகின்றன.

எனினும் எமது நாட்டில் இன்னமும் அடிக்கடி வழக்குகள் பிற்போடப்படும் நிலையே தொடர்கின்றது. இது நாட்டின் நீதித்துறை மீது மக்கள் நம்பிக்கையிழப்பதற்கே வழிவகுக்கும்.

ஆகவே எமது நீதிமன்ற நடவடிக்கைகளின் செயற்திறனை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

நீதித்துறை மறுசீரமைப்பிற்காக வரவு - செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதுவிடயத்தில் நாம் நெடுந்தூரம் முன்நோக்கிப் பயணிக்க வேண்டியுள்ளது. ஆகவே நீதிமன்ற செயற்பாடுகளை மேம்படுத்துகின்ற பொதுவான இலக்கை நோக்கி அனைவரும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

# 49 கோடி ரூபா செலவு செய்தும் யானை - மனித மோதல் முடிவில்லை

## கோபா குழு கணிப்பு

கொழும்பு, மார்ச் 29

யானை – மனித மோதலை தவிர்ப்பதற்காக 2019 மற்றும் 2020ஆம் ஆண்டு காலப்பகுதியில் 49 கோடி ரூபா செலவுசெய்யப்பட்டுள்ளபோதும் யானை – மனித மோதல் குறையவில்லையென பாராளுமன்றத்தில் நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் (கோபா குழு) புலப்பட்டது.

யானை – மனித மோதலைத் தவிர்ப்பதற்கு 2019ஆம் ஆண்டு மின்சார வேலிகளை அமைப்பதற்காக 275,447,639 ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டில் 221,505,818 ரூபா செலவுசெய்யப்பட்டுள்ளது. இத்தொகையைப் பயன்படுத்தி 4,756 கிலோமீற்றர் தூரத்துக்கு மின்சாரவேலிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இருந்தபோதும் 2021ஆம் ஆண்டு மார்ச் 23 ஆம் திகதி வரையில் இலங்கையில் யானை – மனித மோதல் காரணமாக 28 மனிதர்களும், 83 யானைகளும் உயிரிழந்திருக்கின்றன என இக் குழுவில் புலப்பட்டது.

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான, லசந்த அழகியவண்ண, தயாசிறி ஜயசேகர, நாடாளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க, மொஹமட் முஸம்மில், ஜகத் புஷ்பகுமார, பீ.வை.ஜீ. ரத்னசேகர, வைத்தியகலாநிதி உப்புல் கலப்பதி, கலாநிதி ஹரினி அமரசூரிய, வீரசுமண வீரசிங்க மற்றும் சுற்று சுழல் அமைச்சின் செயலாளர் வைத்தியலாநிதி அனில்ஜாசிங்ஹ உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

# ஆற்றல் அமைப்பினால் முல்லையில் சமூகபணி

யாழ்.பல்கலை கழக அரசறிவியல் துறை தலைவர் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் தலைமையில் ஆற்றல் அமைப்பால் முன்னெடுக்கபட்டுவரும் 'சமூக பணி ஒன்று' வேலைத்திட்டத்தின் அங்கமாக முல்லைத்தீவு உண்ணாப்புலவு சிறுவர் பூங்கா வளாகம் கடந்த சனிக்கிழமை சிரமதானம் செய்யப்பட்டுள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் ஆளுகையில் உள்ள இந்த பூங்கா கவனிப்பாரற்று கிடந்த நிலையில் ஆற்றல் அமைப்பின் முயற்சியால் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டு சுத்தம் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் ,சிரேஷ்ட சட்டதரணி பரஞ்சோதி ,ஆற்றல் அமைப்பின் முல்லைத்தீவு இணைப்பாளர் விவேகானந்தன் கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் தவராசா உப தவிசாளர் ரவீந்திரன் உள்ளிட்ட பொதுமக்கள் நலன் விரும்பிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# பெகஸஸ் மென்பொருளை கொண்டு அரசு சகலரையும் கண்காணிக்கிறது

## ஹரின் பெர்னாண்டோ தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 29

அரசாங்கம் பெகஸஸ் எனும் மென்பொருளை பயன்படுத்தி சகலரையும் கண்காணித்து வருவதாகவும், அவர்களின் தனிப்பட்ட விடயங்களை கண்காணிப்பதாகவும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ குற்றம் சுமத்தினார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஈஸ்டர் தாக்குதல் அறிக்கை மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் -

பெகஸஸ் எனும் மென்பொருள் ஒன்று அரசாங்கத்தால் கையாளப்படுகின்றது, இந்த மென்பொருள் மிக ஆபத்தானது. இந்த மென்பொருளை பயன்படுத்தி உங்களின் கமராவில் உள்ள வீடியோவை கையாள முடியும். நீங்கள் எங்கு உள்ளீர்கள் என கண்டறிய முடியும். எனவே அரசாங்கம் எதிர்க்கட்சியை ஆராய்வதை விடவும் ஆளும் கட்சிக்குள் என்ன நடக்கின்றது என்பதையே ஆராய்கின்றது என்ற விடயத்தை நான் பொறுப்புடன் கூறுகின்றேன்.

தொலைத்தொடர்பு ஆணைக் குழு, ஏனைய தனியார் தொலைத் தொடர்பு நிறுவனங்களுக்கு ஒன்றை கூருகின்றேன். இவ்வாறான மோசமான செயல்களில் நீங்கள் சம்பந்தப்பட்டால் என்றாவது ஒருநாள் இந்த அரசாங்கம் கவிழும் அப்போது நீங்கள் பதில் கூறியாக வேண்டும்.

மக்களிடையே தனிப்பட்ட செயற்பாடுகள் இருக்க வேண்டும், அனைவருக்கும் அரசியல் நிலைப்பாடு என ஒன்று இருக்க வேண்டும். ஊடகவியலாளர்களுக்கு சுயமாக கருத்து தெரிவிக்கும் உரிமை இருக்க வேண்டும்.

இவ்வாறு மக்களை கட்டுப்படுத்த வெட்கமில்லையா என்றே அரசாங்கத்தை கேட்கிறேன். களவு, பொய், ஊழல் இல்லையென்றால் எதற்காக இவ்வாறான கீழ்மட்டமான செயல்களில் அரசாங்கம் ஈடுபடுகின்றது?

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பில்இங்குள்ளஉறுப்பினர்கள் உரையாற்ற 8,10 நிமிடங்களே



வழங்கப்படுகின்றன. ஆனால் உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்ற 60 நிமிடங்கள் வழங்கப்பட்டன. அவர் அந்தத் தாக்குதலில் தனக்கு தொடர்பில்லையென்று கூறி தன்னை சுத்தப்படுத்தத்தவே அரச தரப்பால் இந்த 60 நிமிடங்களும் அவருக்கு வழங்கப்பட்டன. - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

ஜனனி தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)




# மெய்நிகர் வகுப்பறை

13

## Online Classroom

கொவிட் 19 பெரும் தொற்று பல ஆசிரியர்களை மெய்நிகர் வகுப்பறைகளுக்கு இழுத்துவந்து வெப்கமரா முன்பாக நிறுத்தியிருக்கிறது. எமது தேசத்தில் பாடசாலைகள், உயர்கல்வி ஆசிரியர்கள் வெப்கமரா முன்பு திடீரென இயங்கவேண்டி வந்ததால் அதனைக் கையாளும் திறனின்றியே முயன்றுகற்று கற்பிக்கிறார்கள். குறிப்பாகத் தனியார்கல்வி ஆசிரியர்கள் தமது தொழிலைத் தக்க வைத்துக் கொள்வதற்காக வேகம் வேகமாக வெப்கமராவைப் பூட்டி அதன்முன் நின்று கத்துகிறார்கள். ஒரு கொட்டிலில் நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு தமது நேருக்கு நேரான கற்பித்தலின் போது பெருங்குரலெடுத்து கத்த வேண்டிய ஆசிரியர்கள் இப்போது ஒரு வெப் காமராவைப் பார்த்துக் கற்பிக்க வேண்டிய சூழல் காணப்படுகிறது. ஆனால் அருகில் ஒரு கமராவை வைத்துக்கொண்டு எவ்வாறு கற்ப்பிப்பது என்பது சிரமமான ஒன்றாகவே இவர்களுக்கு இன்றும் காணப்படுகிறது எனலாம்.

பெரும்திரளான மாணவர்களுக்கு ‘குழறிக் கத்தி’ வகுப்பெடுத்த ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் மெய்நிகர் கல்வியை நிராகரிக்கிறார்கள். வகுப்பறைகளில் நேருக்கு நேர் கற்பிக்கும் பாரம்பரிய முறையையே விரும்புகிறார்கள். ஆனால் கொவிட் முடக்கம் மீண்டும் மீண்டும் அச்சுறுத்துவதால் வெப்கமரா முன்பான கற்ப்பித்தல் மற்றும் கற்றலில் தேர்ச்சிபெறவேண்டுமென்ற



நிலை நீடிக்கிறது. பாடத்திட்டங்களை பூர்த்திசெய்ய மாணவர்கள் தவிர்க்க முடியாமல் வெப்கமரா முன்பாக நிற்கும் ஆசிரியரைக் காணவேண்டும் என்ற நிலை அதிகரிக்கிறது. மாணவர்கள் ஒன்லைன் கோப்புகள் மற்றும் வீடியோ மாநாடுகளை விட உயர் தரமான கற்றல் அனுபவத்தை ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கிறார்கள்.

ஓர் ஆசிரியர் ஒரு வெப்கேமுக்கு முன்னால் அமர்ந்திருக்கும்போது முழு உடல் மொழியைப் பயன்படுத்த தேவையில்லை, அதனைக் குறைவாகப் பயன்படுத்தினால் போதுமானது. ஒருவெப்கமரா முன்பான அதிகளவு உடல் அசைவுகள் மாணவர்களின் கவனக்கலைப்பான்களாக மாறிவிடும். ஆனால் அதிகளவில் கைகள் மற்றும் முகபாவனைகளைப் பயன்படுத்த வேண்டியிருக்கும். வெப்கமராவின் மைக் ஆசிரியரின் குரலை நன்றாக பதிவுசெய்யக்கூடியது என்பதை நினைவில் கொள்ளவும், எப்போதும் ஆசிரியர் சில அடி தூரத்தில் இருந்து கற்ப்பிக்கலாம். அங்கிருந்தபடியே குரலை நன்றாகப் பதிவு செய்ய முடியும். வெப்கமரா முன்பாக ஆசிரியர் துலக்கமாகத் தெரிவதற்கான ஒளியமைப்பு தேவைப்படும். கமரா எப்போதும் ஒளியைநோக்கி நகரவல்லது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். கமராவில் கற்ப்பிக்கும் போது நிஜப்பொருள்களைக் காட்சிப் படுத்த முடியும். ஆசிரியர் ஒரு குழுவுடன் பணிபுரியும் போது அவர்களுடன் ஊடாட வேண்டும். இணையக்கல்வியை ஆசிரியர்கள் நேரடி ஒரு வழி வழுங்கலுடனான விரிவுரையாக மாற்ற வேண்டாம். பார்வையாளர்களின் பங்கேற்பை அதிகரிப்பதற்கான பல உத்திகளைப்பயன்படுத்த வேண்டும். இதற்கு பாரம்பரிய வகுப்பறையிலுள்ள பல கற்ப்பித்தல் ’கருவி’களை மெய்நிகர் வகுப்பறைக்கு கொண்டு வரலாம்.


கேள்வி கேட்டல், ஆமோதிப்பைப் பெறுதல், விவாதங்களை ஏற்பாடு செய்தல், அபிப்பிராயங்களைப் பெறுதல், உரை அரட்டை போன்ற வழிகளைப் பயன்படுத்தலாம்.

ஒரு மெய்நிகர் தளத்தில், நேரடி அமர்வைத் தொடங்குவதற்கு முன்பு எல்லா தாவுகளையும் தயாரித்து கையில் வைத்துக் கொள்ள வேண்டியிருக்கும். எந்தவொரு இணையச் சந்திப்பிற்கும் முன்பும் ஆசிரியர் ஒருதொழில்நுட்பசோதனை செய்ய வேண்டும். ஏனெனில் கற்ப்பித்தலை தொடங்கியவுடன் இதனைச் செய்ய முடியாது. சாதனங்களைச் சரிபார்க்க வசதிகள் மென்செயலியியல் உள்ளன. குறிப்பாக ஒரு மென்பொருள் செயலியின் செய். கருவிகள், வீடியோ மற்றும் ஓடியோ அமைப்புகளை மிக எளிதாக சோதிக்கலாம். அதற்கான சோதனை வசதிகள் உள்ளன.

ஒரு மெய்நிகர் வகுப்பறையில் உண்மையான தொடர்பு தேவைப்படும் உண்மையான நபர்கள் உள்ளனர். மெய்நிகர் வகுப்பறையில் கற்பிக்கத் தொடங்கியதும், வெப்கேமுடன் கண் தொடர்பு கொள்ளவதை நினைவில் கொள்ள வேண்டும். எல்லா நேரங்களிலும் இதைச் செய்ய முடியாது, என்றாலும் கண் தொடர்பு என்பதை அடிப்படைநாதமாகக் கொள்ள வேண்டும். இங்கு, வெப்கேம் கற்பவரின் ‘கண்’ என்பதை நினைவில் கொள்ன வேண்டும் அதற்கேறப்ப துலங்க வேண்டும். கேட்பதைக் காட்டிலும் விடயங்களைப் பார்ப்பது மிகவும் சக்தி வாய்ந்தது.

வெப்கேம்கள் பல தசாப்தங்களாக கிடைக்கின்றன, ஆனால் அவை மாணவர்களை கவர்ந்திழுக்கும் ஒரு சிறந்த கல்வி வளமாக தற்போது நன்கு அறியப்படுகின்றன. வெப்கேம்கள் மூலம் தொலைதூர இடங்களை உயிர்ப்பிக்க முடியும்.

உயிரியல் பூங்காக்கள், மீன்வளங்கள், அருங்காட்சியகங்கள் மற்றும் வனப்பகுதிகளில் விலங்குகளின் வாழ்விடங்கள் ஆகியவற்றைப் படிக்க நேரடி வீடியோவை ஸ்ட்ரீம் செய்யும் வெப்கேம்களைப் பயன்படுத்தலாம். இதனால் கற்ப்பித்தல் உயிர்பூட்டப்படும். மாணவர்கள் பார்வையிட வாய்ப்பு கிடைக்காத இடங்களை இதன்மூலம் காணமுடியும். விண்வெளி, துருவப் பகுதிகள், நீருக்கடியில் அல்லது பிரபலமான அடையாளங்கள் போன்ற இடங்களை உண்மையான நேரத்தில் பார்வையிடவும், சுற்றியுள்ள உலகத்துடன் தங்கள் சொந்த அனுபவங்களை இணைக்க ஆசிரியர்கள் மாணவர்களுக்கு உதவ முடியும். இதே போன்று கலந்துகொள்ள கிட்டத்தட்ட சாத்தியமில்லாத சாகசங்களைப் பார்க்க வாய்ப்புக்கிடைக்கிறது. நிகழ்நேரத்தில், பதிவுசெய்த ஏறுதல் அல்லது படகோட்டம் பயணம், ஒலிம்பிக் போன்ற நேரடியாக பதிவுசெய்யப்பட்ட எந்தவொரு நிகழ்வையும் பின்பற்றலாம். தீவிர வானிலை மற்றும் அதன் விளைவுகள் பற்றிய புரிதலைப் பெற வெள்ளம், சூறாவளி மற்றும் பூகம்பங்கள் போன்ற இயற்கை பேரழிவுகளைக் காணலாம். ஆகவே இவைகலந்த மெய்நிகர் கற்ப்பித்தல் தொலை




தூரத்திலிருந்து இன்று சாத்தியமாகிறது.

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இருவரும் ஒரு வெப்கேமைப் பயன்படுத்தி வீடியோக்களை உருவாக்கலாம். ஒரு கணிதக் கணக்கீட்டைத் தீர்க்கவும், ஒரு கருத்தை விளக்கவும் அல்லது ஒரு நுண்ணோக்கி மூலம் காட்சியைக் காட்ட அனுமதிக்கும் அடப்டரைப் பயன்படுத்தி அறிவியல் பரிசோதனையை செய்து ஒரு வீடியோவைத் தயாரிக்கலாம்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணிவோடு உண்மையை எடுத்துசொல்கின்ற ஊடகங்கள் இந்த அரசு காலத்தில் தேவை

## நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் எடுத்துரைப்பு

இன்றைய காலகட்டத்தில் ஊடகம் மிக மிக முக்கிய பங்கை வகிக்கின்றது. இன்றைக்கு விசேடமாக இந்த அரசாங்கத்தின் கீழே துணிவோடு உண்மையை எடுத்துச் சொல்கின்ற ஊடகங்கள் தேவைப்படுகின்றன. ஊடக சுதந்திரம் திரும்பவும் கேள்விக்குறியாக்கப் படுகின்றது. ஊடக சுதந்திரம் இந்த நாட்டில் எப்படியாக இருந்தது என்று 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் எங்களுக்குத் தெரிந்திருந்தது. பல ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டார்கள், கொல்லப்பட்டார்கள், இன்னும் பலர் நாட்டை விட்டு ஓடினார்கள். இன்றைக்கும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் பெருமையோடு சொல்லுகினற விடயம் அவருடைய காலத்தில் எந்த ஊடகவியலாளரும் தாக்கப்படவில்லை என்பதாகும். அதை அவர் பெருமையாகச் சொல்லும் அளவிற்கு உண்மையும் இருக்கின்றது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஊடகப் பேச்சாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.



கடந்த சனிக்கிழமை கல்முனையில் இடம்பெற்ற பரிணாமம் என்னும் பத்திரிகை வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஊடகத்துறைக்கு திரும்பவும் ஒரு சவாலான காலநிலை உருவாகுகின்ற இந்தச் சூழ்நிலையிலே பழைய நிலைக்குச் செல்லாமல் ஊடக தர்மத்தையும், ஊடகங்களையும் பேணிப் பாதுகாப்பதிலே ஆட்சியாளர்கள், சமூகத்தினர் மட்டுமல்லர், ஊடகத்துறையிலே இருக்கின்றவர்களுக்கும் ஒருபெரும் பங்கு இருக்கின்றது

வலைத்தளங்களில் இருக்கின்ற ஊடகங்களில் வருகின்ற செய்திகள் உடனுக்குடன் வருவதாக இருந்தாலும், அதன் உண்மைத்தன்மை பற்றி பலருக்கும் கேள்விகள் இருக்கின்றன. ஒரு பொறுப்போடு செய்திகைளப் பிரசுரிக்கத் தேவையில்லை என்ற வகையில் இணையவழி செய்திகள் வெளிவருகின்றன.

ஆனால் அச்சுப் பதிப்பிலே ஓர் ஊடகம் வெளிவருகின்றபோது அது சம்பந்தமான சட்டங்கள் எமது நாட்டில் ஊறிப்போயிருக்கின்ற காரணத்தாலே எதையும் அச்சிட்டு பிரசுரித்துவிட முடியாது.

ஆனால் தற்போது நிலைமை மாறுகின்றது என்கின்ற ஓர் அச்சம் எழுந்துள்ளது. பழைய நிலைக்குச் செல்லாமல் ஊடக தர்மத்தைக் காத்து ஊடகங்களைப் பேணிப் பாதுகாப்பதிலே ஆட்சியாளர்கள், சமூகத்தினர் மட்டுமல்லர், ஊடகத்துறையிலே இருக்கின்றவர்களுக்கும் ஒரு பெரும் பங்கு இருக்கின்றது.

உண்மையான, சரியான செய்தியைச் சரியான கோணத்தோடு அதனை வெளியிடுகின்ற போது அந்த ஊடகத்துக்கும் அந்தச் செய்திக்கும் ஒரு மதிப்பு இருக்கும்.

எனவே ஊடகத்துறைக்கு திரும்பவும் ஒரு சவாலான காலநிலை உருவாகுகின்ற இந்தச் சூழ்நிலையிலே இன்று கல்முனை நெற் இணையத்தளத்தால் வெளி யிடப்படுகின்ற பரிமாணம் என்ற பத்திரிகையும் உண்மையான, சரியான ஊடக தர்மத்திற்கு உகந்ததான செய்திகளை வெளியிடும் என்றுநாங்கள்நம்பகின்றோம்என்றுதெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம், இரா.சாணக்கியன், தவராசா கலையரசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சீனக் கூட்டில் இலங்கை இழைத்த தவறுகள் பங்களாதேஷுக்கு நல்ல படிப்பினைகளாம்!

## அந்நாட்டின் பிரதமரின் வெளிவிவகார ஆலோசகர் கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 29

சீனாவுடனான தொடர்புகளைப்பேணும்போது இலங்கை இழைத்த தவறுகளிலிருந்து தமது நாடு பாடம் கற்றுக்கொண்டுள்ளதாக பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவின் வெளிவிவகார ஆலோசகர் கௌஹர் ரிஸ்வி தெரிவித்துள்ளார்.

அதுமாத்திமன்றி சீனாவுடனான தொடர்புகளின் போது மிகவும் சீரானதும் சரிவர அளவீடு செய்யப்பட்டதுமான முதலீட்டுக்கொள்கையையே தாம் பின்பற்றுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சீனா தனது ‘கடன்பொறி’ மூலோபாயத்தைப்பயன்படுத்தி அபிவிருத்தியடைந்துவருகின்ற மற்றும் அபிவிருத்தியடையாத நாடுகளைக் கவர்ந்திழுக்கும் வேளையில், இவ்வாறானதொரு கருத்து வெளியாகியிருப்பதாக சர்வதேச ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை மற்றும் கிழக்கு ஆபிரிக்க நாடான ஜிபோட்ரி போன்ற நாடுகள் சீனாவிடம் பெற்ற கடனை மீளச்செலுத்துவதற்கான ஆற்றலை இழந்துள்ளமையால் அவற்றின் சொத்துக்கள் மீதான கட்டுப்பாட்டை சீனாவிற்கு வழங்குவதற்கு நிர்பந்திக்கப்பட்டுள்ளமையில் இருந்து தமது நாடு பாடம் கற்றுக்கொண்டுள்ளதாக ரிஸ்வி தெரிவித்துள்ளார்.

சீனாவிடம் ஜிபோட்ரி பெற்ற கடனின் பெறுமதி, அந்நாட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 70 சதவீதமான வற்றையும் விட அதிகமாகும் என்று அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

மேலும் ’எமது நாட்டின் இறையாண்மையை எவ்வாறு பாதுகாக்கவேண்டும் என்பதை நாம் நன்கு அறிந்துள்ளோம்.

விடுதலையை இலக்காகக்கொண்ட போராட்டத்தின் ஊடாக நாம் தற்போது சுதந்திர நாடாக மாற்றமைந்துள்ளோம்.

ஆகவே எமது பெறுவனவுகளைச் சரிவரக் கண்காணிக்கும் அதே வேளை, வெளிநாடுகளிடமிருந்து பெறும் கடன்களை மீளச்செலுத்தக்கூடிய எமது ஆற்றல் தொடர்பிலும் மிகுந்த அவதானத்துடன் இருக்கின்றோம். - என்றும் பங்களாதேஷ் பிரதமரின் வெளிவிவகார ஆலோசகர் ரிஸ்வி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முதலை இழுத்துச் சென்ற சிறுவன் சடலமாக மீட்பு!

திருகோணமலை, சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இத்திக் குளத்தில் குளிக்கச் சென்ற சிறுவன் முதலையின் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்த நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

தோப்பூர், பள்ளிக்குடியிருப்பு - இத்திக்குளம் பகுதியைச் சேர்ந்த கோணலிங்கம் லேனுஜன் (15 வயது) என்ற சிறுவனே நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இத்திக்குளம் குளத்தில் நேற்று இரண்டு சிறுவர்களுடன் நீராடிக் கொண்டிருந்த குறித்த சிறுவனை முதலை இழுத்துச் சென்றது எனவும், இதையடுத்து அச்சிறுவனுடன் சென்ற சிறுவர்கள் வீட்டுக்குச் சென்று தகவலைக் கூறியதையடுத்து அங்கு ஓடிச் சென்ற சிறுவனின் தந்தை, தன்னுடையமகனை முதலை இழுத்துச்செல்வதை அவதானித்தார் எனவும் பொலிஸ் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

காணாமல் போயிருந்த சிறுவன் முதலை கடித்த நிலையில் கிராம மக்களின் உதவியுடன் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டார். சம்பவம் தொடர்பில் சம்பூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பைசர் நிறுவனத்துடனான பேச்சுகள் வெற்றியளிப்பு

பைசர் - பயோஎன்டெக் நிறுவனத்திடம் இருந்து கொரோனாத் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்வதற்கான பேச்சுகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

70 டிகிரி உறைநிலையில் வைத்திருப்பதற்கான சேமிப்பு வசதிகள் இலங்கையிடம் இல்லை என்றும் இருப்பினும் உற்பத்தியாளர் அதற்கான தீர்வை வழங்கியுள்ளனர் எனவும் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

குறித்த நிறுவனம் தயாரிக்கும் தடுப்பூசிகளை ஏறக்குறைய ஒரு வாரம் சாதாரண உறைநிலையில் வைத்திருக்க முடியும் என என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனவே பைசர் - பயோஎன்டெக் நிறுவனத்திடம் இருந்து விரைவில் இலங்கைக்குத் தடுப்பூசிகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன கூறினார்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

## வெற்றிலை



இலங்கை முழுதும் பரவலாக பசுமையானதாகவும் முயற்சியான்மையாளர்களினாலும் வளர்க்கப்படுகின்றது. இதன் வர்த்தக உற்பத்தி இலையாகும். இது பெறும்பாலும் பாக்குடன் சுண்ணாம்பு, புகையிலை மற்றும் சில ஏனைய உள்ளீடுகள் என்பவற்றுடன் சேர்த்து மென்று சாப்பிடுவதற்காக பயன்படுத்தப்படுகின்றது. கி.மு 340 இற்கு முன்னரில் இருந்தே இலங்கையில் வெற்றிலை சாப்பிடும் பழக்கம் இருக்கின்றது.

அத்துடன் அக்காலப்பகுதியில் இருந்தே வெற்றிலையானது சமூகத்தில் மதிப்புக்குரியவர்களினால் மதிப்புக்குரிய ஒரு பொருளாக பயன்படுத்தப்பட்டு வந்தது. வெற்றிலையின் பிறப்பிடமாக மலேசியா அல்லது கிழக்காசியா பிராந்தியத்தில் சூழவுள்ள பகுதியாகும் என நம்பப்படுகின்றது.

அத்துடன் கிழக்காசியா பிராந்தியத்தின் சூழவுள்ள பகுதியாகும். என நம்பப்படுகின்றது. அத்துடன் சீனா மற்றும் அராபிய வர்த்த்தகர்களினால் இலங்கை மற்றும் ஏனைய தெற்காசிய நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது. என சொல்லப்படுகின்றது. எவ்வாறாயினும் 10 இற்கும் மேற்பட்ட வன தொடர்பு வெற்றிலை இலைக ளில் காணப்படுகின்றன.

இன்று வெற்றிலை உள்நாட்டு நுகர்வுக்காகவும் ஏற்றுமதிக்காகவும் வளர்க்கப்படுகின்றது. வெற்றிலையை பிரதானமாக வளர்க்கும் நாடுகளாக இலங்கை, இந்தியா, தாய்லாந்து, பங்காளதேஷ் ஆகிய நாடுகளை குறிப்பிடலாம். பாகிஸ்தான் இலங்கையின் வெற்றிலையை பிரதானமாக இறக்குமதி செய்யும் நாடாகும்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# திருநெல்வேலி பாற்பண்ணை கிராமம் முடக்கம்!

**(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)**

யாழ்., நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக் குட்பட்ட திருநெல்வேலி, பாற்பண்ணை கிராம அலுவலகர் பிரிவு முற்றாகத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தில் 51 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ள நிலையிலேயே பிரதேசத்தை தனிமைப்படுத்த நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது என யாழ். மாவட்ட அரச அதிபரும் மாவட்ட கொரோனாத் தடுப்புச் செயலணியின் தலைவருமான க.மகேசன் இன்று தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் இன்று நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திருநெல்வேலி பொதுச் சந்தைக் கடைத் தொகுதி வியாபாரிகளுக்கும்அங்கும்பணியாற்றும்தொழிலாளர்களுக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியிருந்த நிலையில், பாற்பண்ணை பிரதேசத்தில் நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அங்கு 51 பேருக்குத் தொற்று உறுதியாகியுள்ளது என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் பாற்பணை கிராமத்துக் கான போக்குவரத்துக்கள் முடக்கப்பட்டுள்ளன. அந்தப் பிரதேசத் துக்குள் வெளியார் நுழையாதவாறும், அங்குள்ளவர்கள் வெளியில் செல்லாதவாறும் இரா ணுவத்தினர் மற்றும் பொலிஸாரால் வீதித் தடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

அத்தியாவசிய சேவை, தொழில் நிமித்தம் வெளியில் வருகை தருவோர் அலுவலக அடையாள அட்டையைக் காண்பித்து வெளியேற முடியும்.

சிறப்புக் காரணங்களுக்காக கிராமத் திலிருந்து வெளியில் செல்வோர் பொதுச் சுகாதார பரிசோதகர்களிடம் விண்ணப் பித்து அனுமதி கிடைத்தால் பயணிக்க முடியும் - என்றார். இதேவேளை, யாழ். நகரின் மத்திய பகுதி கடந்த வெள்ளிக்கிழமை முதல் முடக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.



### கொரோனாவின் தாண்டவத்தையடுத்து

# யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகள் ஒரு வாரம் மூடல்

**(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட் பட்ட அனைத்துப் பாடசாலைகளும் ஒரு வாரத்துக்கு மூடப்படுகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று நிலைமை அதிகரித்து வரும் நிலையில் யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட அனைத்துப் பாட சாலைகளும் நாளையிலிருந்து ஒரு வாரத்துக்கு மூடப்படுகின்றன என்று யாழ். மாவட்ட அரச அதிபரும் மாவட்ட கொரோனாத் தடுப்புச் செயலணியின் தலைவருமான க.மகேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், யாழ். மாவட்ட அரச அதிபர் ஆகியோர் ஆராய்ந்தே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய தற்போதுள்ள இடர் காலத்தைக் கருத்தில்கொண்டு நாளை முதல் எதிர்வரும் 4ஆம் திகதி வரை யாழ். கல்வி வலயப் பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் இடைநிறுத்தப்படுகின்றன என்று யாழ். மாவட்ட அரச அதிபர் மேலும் கூறியுள்ளார்.

# மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் பலி

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பாரதிபுரம் பகுதியில் இன்று காலை மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார்.

அவர் தனது குடும்பத்தோடு புளியம் பொக்கணை கோயிலுக்குச் செல்வதற்காக வாகனத்தை மின்சார சுத்திகரிப்பு இயந்திரத்தால் கழுவிக் கொண்டிருக்கின்ற வேளையில் சுத்திகரிப்பு இயந்திரத்தின் மின் ஒழுக்கால் மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

ஒருபிள்ளையின் தந்தையான 39 வயதுடைய இராசலிங்கம் ஜெயபாலன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

# யாழில் அடுத்து வரும் சில நாள்களுக்கு தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிக்கும்

### இம்மாதம் இதுவரை 300 பேருக்குக் கொரோனா



**(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இந்த மாதம் இதுவரை 300இற்கும் மேற்பட்டோர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று யாழ். மாவட்ட அரச அதிபரும் மாவட்ட கொரோனாத் தடுப்புச் செயலணியின் தலைவருமான க.மகேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் இன்று நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்தின் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று மாத்திரம் 143 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப் பட்டுள்ளது. அடுத்து வரும் ஓரிரு நாள்களில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து குறைவடையும் எனச் சுகாதாரத் துறையினர் அறிவித்துள்ளனர்.

சுயதனிமைப்படுத்தல் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. நேற்றிரவு வரை 244 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளன.

நல்லூர் மற்றும் யாழ்ப்பாணம் மாநகர சுகாதாரப் பிரிவுகளில் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மாநகர், திருநெல்வேலி நகர் கடைகளை மூடி உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் சுயதனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளனர். - என்றார்.

# திருநெல்வேலி சந்தை கொத்தணி: 177 பேருக்கு இதுவரை கொரோனா

### வடக்கு சுகாதார திணைக்களப் பணிப்பாளர் தெரிவிப்பு

**(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம், மார்ச் 28

திருநெல்வேலி பொதுச் சந்தை மற்றும் அதனைச் சூழவுள்ள வர்த்தக நிலையங்களோடு தொடர்புபட்ட 177 பேருக்கு இந்த மாதம் இது வரை கொரோனா வைரஸ் உறுதி செய்யப் பட்டுள்ளது என வடக்கு மாகாண சுகாதார திணைக்களப் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் தற்போது அதிகரிக்கும் கொரோனா நிலைமை தொடர்பில் இன்று மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தலைமையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலையடுத்து இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:-

திருநெல்வேலி பொதுச்சந்தையில் கடந்த மாதமும் எழுமாற்றாக பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டபோது கொரோனா வைரஸ் தொற்றுடன் எவரும் அடையாளம் காணப்படவில்லை. இந்த மாதமே தொற்று தீவிர பரவலடைந்துள்ளது. திருநெல்வேலி பொதுச் சந்தையில் தொடர்ந்தும் பி.சி.ஆர். பரிசோதனை இடம்பெறும். அதே காலத்தில் ஏனைய சந்தைகளும் கண்காணிக் கப்படும்.



இதேநேரம், யாழ். மாநகரில் மூடப்பட்டுள்ள வர்த்தக நிலையத்தினரை சுயதனிமைப்படுத்தலில் இருக்குமாறும், வழக்கமான நிகழ்வுகளை இரத்துச் செய்யுமாறும் கோரப்பட்டுள்ளது. - என் றார்.



### சமூக இடைவெளியைப் பின்பற்றாது

# பி.சி.ஆர். பரிசோதனைக்காக யாழில் முண்டியடித்த மக்கள்!

**(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)**

யாழ். மாநகரில் முடக்கப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள், முகாமையாளர்கள், பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் அனைவருக்குமான பி.சி. ஆர். பரிசோதனை இன்று காலை முதல் மேற்கொள்ளப்பட்டது.

யாழ். மாநகர் நவீன சந்தைக் கட்டடத் தொகுதியின் மூன்று இடங்களில் யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நிலையில் அங்கு நூற்றுக்கணக்கானவர்கள் சமூக இடைவெளியைப் பின்பற்றாது பரிசோதனைக்காக ஒன்றுகூடினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலம்பெயர் அமைப்புகள் மீதான தடை குறித்து ஆராய்கின்றது கூட்டமைப்பு

### சுமந்திரன் எம்.பி. கருத்து

இலங்கை அரசால் புலம் பெயர் அமைப்புகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடை குறித்து ஆராய்ந்து வருகின்றோம்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.



விசேட வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிட்டுள்ள இலங்கை அரசு 7 புலம்பெயர் தமிழ் அமைப்புகளுக்கும், 300 இற்கும் மேற்பட்ட தனிநபர்களுக்கும் தடை விதித்துள்ளது.

இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் ஊடகங்களுக்குக் கருத்துக் கூறுகையில் -

இந்த விடயம் குறித்து அறிந்துள்ளோம். இது தொடர்பாக ஆராய்ந்துவருகின்றோம்.

இந்த அரசு ஆட்சிக்குவந்தவுடன் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவார்கள் என்பது தெரிந்த விடயமே.

இது குறித்து விரைவில் எங்களின் நிலைப்பாட்டை அறிவிப்போம் - என்றார்.

## முற்றாக முடங்குமா யாழ்ப்பாணம்? மக்களின் நடத்தையிலேயே முடிவு

### கொரோனாக் கட்டுப்பாட்டுச் செயலணி தெரிவிப்பு

ஒரு மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் திடீரென அதிகரித்தால் அந்த மாவட்டத்தை முற்றாக முடக்குவதா? இல்லையா? என்பது மக்களின் நடத்தைகளில்தான் தங்கியுள்ளது. எனவே, யாழ்ப்பாணம் மாவட்ட மக்கள் சுகாதார ஒழுங்கு விதிகளை உரிய முறையில் கடைப்பிடிக்க வேண்டும்.

- இவ்வாறு இராணுவத் தளபதியும் கொரோனாக் கட்டுப்பாட்டுச் செயலணியின் தலைவருமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

கொரோனாத் தாக்கத்தால் யாழ்ப்பாண மாவட்டத்தின் சில பகுதிகள் முடக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு மாவட்டங்களிலும் கொரோனாத் தடுப்புக்காக அந்தந்த மாவட்டச் செயலர்கள் தலைமையில் மாவட்ட கொரோனாத் தடுப்புச் செயலணிகள் அமைக்கப்பட்டுள்ளன. அதற்கு அமைவாக கொரோனாத் தொற்றாளர்கள் திடீரென அதிகரித்ததையடுத்து யாழ்ப்பாண மாவட்டத்தின் நகரத்தில் சில பகுதிகள் 10 நாள்கள் முடக்கப்பட்டுள்ளன. இந்தக் கொரோனாத் தாக்கத்தால் வர்த்தகர்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, முடக்கப்பட்ட நாட்களுக்குள் வர்த்தகர்கள் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொண்டு அதன் அறிக்கைகளை சுகாதாரப் பிரிவினரிடம் கையளிக்க வேண்டும். அதன் பின்னர் வர்த்தக நிலையங்களை திறக்க முடியும்.



பொதுமக்களும் முடக்கப்பட்ட பகுதிகளுக்குள் தேவையற்ற பயணங்களைத் தவிர்க்க வேண்டும். சுகாதார வழிகாட்டல்களை ஒழுங்கான முறையில் அனைத்துத் தரப்பினரும் பின்பற்ற வேண்டும். சுகாதாரப் பிரிவினர் மற்றும் பாதுகாப்புப் படைகளின் சேவைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் - என்றார்.

## தேசியப் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறைப்பே ஈஸ்டர் தாக்குதல் காரணம்!

### அறிக்கை குறித்துக் கோட்டா கருத்து

கொழும்பு, மார்ச் 29

அரசு தேசிய பாதுகாப்புக்கு வழங்கிய முக்கியத்துவத்தை குறைத்ததாலேயே ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் ஒவ்வொரு பக்கத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.



ஜனாதிபதியின் கிராமத்துடன் கலந்துரையாடல் நிகழ்ச்சியின் மற்றுமொரு கூட்டம் நேற்று முன்தினம் (சனிக்கிழமை) மாத்தறை - பிட்டபெத்தர - கிரிவெல்லகெலே கிராமத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது மேலும் தெரிவித்த அவர் -

தேசிய பாதுகாப்பு வீழ்ச்சியுற்று, சர்வதேச அரங்கிற்கு சென்று ஜெனிவாவில் தீர்மானங்களுக்கு இணை அனுசரணை வழங்கி நாட்டின் இறைமை மற்றும் சுயாதீனத்தன்மையை முற்றாக சீரழித்தனர் எனத் தெரிவித்தார்.

இணை அனுசரணை வழங்குவதிலிருந்து தாம் விலகினோம் என்றும் அதற்காக அவர்கள் எமக்கு எதிராக செயற்படுகின்றனர். எம்மால் அதனை அச்சமின்றி எதிர்கொள்ள முடியும் எனவும் குறிப்பிட்டார்.

மேலும் இந்து சமுத்திரத்தின் பலம்பெருந்திய நாடுகளின் போராட்டங்களுக்குள் அகப்படுவதற்கான தேவை தமக்கில்லை எனவும் ஜனாதிபதி கூறினார்.

தனது ஆட்சிக்காலத்தில் எதிர்கொள்ள நேரிட்ட பிரச்சினைகள் அனைத்தும் கடந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளைத் திருத்துவதற்கு முயன்றதால் ஏற்பட்டவையெனவும் ஜனாதிபதி மேலும் கூறினார்.

## இலங்கைக்குப் பேராபத்து!

### சந்திரிகா அம்மையார் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 29

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இந்த நாட்டுக்கு பேரவமானம். இந்தத் தீர்மானத்தால் இலங்கைக்கு சர்வதேச அரங்கில் எந்த வேளையிலும் பேராபத்து ஏற்படலாம்.

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்தார்.



ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவது தொடர்பான தீர்மானம் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்படும் என்று முதலே இலங்கை அரசுக்கு தெரியும். அவ்வாறு தெரிந்துகொண்டு அதற்குச் சவால்விடும் வகையில் இலங்கை அரசு செயற்பட்டது. அந்தச் சவால் தவிடுபொடியாகியுள்ளது.

ராஜபக்ஷ அரசின் வெளிவிவகாரக் கொள்கை படுதோல்வியடைந்துள்ளது. இது நாட்டுக்குப் பேரவமானம். நாட்டின் இன்றைய மோசமான நிலைக்கு இந்தத் தீர்மானம் சான்றாக அமைந்துள்ளது. இந்தத் தீர்மானத்தால் இலங்கைக்கு சர்வதேச அரங்கில் எந்தவேளையிலும் பேராபத்து ஏற்படலாம்.

ஏனெனில் பொறுப்புக்கூறல் விடயத்தில் அரசு தட்டிக்கழிப்பதால் சர்வதேசம் இலங்கை மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் மறுபுறத்தில் நிரூபணமாகின்றது. இதனால் சர்வதேச அழுத்தங்கள் மேலும் இலங்கை மீது அதிகரிக்கும். என்ன நடந்தாலும் ஐ.நா.வின் தீர்மானத்துக்கு கட்டுப்பட வேண்டிய நிலை இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது - என்றார்.

### புதிய அரசமைபு ஊடாக

## அதிகாரப் பரவலாக்கலை சுதந்திரக் கட்சி ஆதரிக்கும்

இலங்கையின் புதிய அரசமைப்பின் ஊடாக அதிகாரப் பரவலாக்கல் கோட்பாட்டை தாம் ஆதரிப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

இலங்கையின் புதிய அரசமைப்பு வரைவுக்கான ஆலோசனைகளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நேற்றுமுன்தினம் சமர்ப்பித்துள்ளது.

அதிகாரப் பரவலாக்கத்தின் ஊடாக மாகாண சபைகளுக்கு மேலதிகமாக மாவட்ட சபை மற்றும் முன்னர் இருந்த செனட் சபை முறைகளையும் தாம் பரிந்துரைத்துள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினரான அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உறுப்பினர்களையும் துறைசார் பிரதிநிதிகளையும் உள்ளடக்கி மேற்படி சபைகள் அமைக்கப்பட வேண்டும் என்று எமது கட்சி பரிந்துரைத்துள்ளது. அத்தோடு, தேர்தல்களில் விருப்பு வாக்கு முறையும் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்று நாம் முன்மொழிந்துள்ளோம்.

தற்போதுள்ள அரசமைப் பில் அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான பிரிவில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளோம்.

பௌத்த மதத்துக்கு முன்னுரிமை, விலங்குகள் - சுற்றாடல் பாதுகாப்பு போன்ற விடயங்கள் ஆகியனவும் புதிய அரசமைப்பில் உட்சேர்க்கப்பட வேண்டும் என்றும் கோரியுள்ளோம் - என்றார்.

## மட்டக்களப்பு வெல்லாவெளியில் வெடிபொருளுடன் ஒருவர் கைது!

மட்டக்களப்பு வெல்லாவெளி பிரதேசத்தில் கல் உடைப்பதற்கான கல்குவாரி அனுமதிப்பத்திர காலவதியான நிலையில் அதற்கு பயன்படுத்தும் வெடிபொருள்களை வைத்திருந்த ஒருவரை கடந்த சனிக்கிழமை விசேட அதிரடிப்படையினர் கைது செய்ததுடன் வெடிபொருள்களை மீட்டு தம்மிடம் ஒப்படைத்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து சம்பவதினமான சனி வெல்லாவெளி பொலிஸ் பிரிவிலுள்ள விவேகானந்தபுரம் பிரதேசத்தில் கல்குவாரியில் விசேட அதிரடிப்படையினர் சுற்றிவளைத்து சோதனையிட்டனர்.

இதன்போது கல் உடைப்பதற்காகப் பயன்படுத்திய வெடிபொருள்கள் அனுமதிப்பத்திரம் காலவதியான நிலையில் வெடிபொருள்களை வைத்திருந்த ஒருவரைக் கைது செய்தமையுடன் அங்கிருந்து மீட்கப்பட்டன.

166 டைனமற்குச்சிகள், 10 யார் கொண்ட சேவா நூல் 20, 20 டெக்கினேற்றுக்களை மீட்டு வெல்லாவெளி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த

## மேலும் இருவர் சாவு; கொரோனா காவு 561

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சு உறுதிப்படுத்தியது.

கொழும்பு - 15 ஐச் சேர்ந்த 60 வயது ஆண் ஒருவரும், மாவனெல்லை பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயது ஆண் ஒருவரும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 561 ஆக அதிகரித்துள்ளது.

## ரயில் மோதியதில் ஓட்டோ தீ பற்றி எரிந்தது!

கொழும்பு, மார்ச் 29

பெலியத்தை பகுதியில் இருந்து மருதானை சென்ற ரயில் இந்துருவ பகுதியில் ஓட்டோ ஒன்றை மோதியதில் குறித்த ஓட்டோ முற்றாக தீப்பிடித்து எரிந்துள்ளது.

நேற்று முன்தினம் (சனிக்கிழமை) மாலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் ஓட்டோ சாரதி படுகாயமடைந்துள்ளார்.

பாதுகாப்பற்ற ரயில் கடவையை ஓட்டோ கடக்க முற்பட்டபோதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. படு காயமடைந்த சாரதி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா தொற்றாளர் அம்புலன்ஸில் உயிரிழப்பு

கொரோனா தொற்றாளர் ஒருவர் வவுனியாவில் இருந்து அநுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படும்போது, அம்புலன்ஸில் உயிரிழந்துள்ளார். 82 வயதுடைய முல்லைத்தீவு பிரதேசத்தை சேர்ந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் .



அவருக்கு திடீரென ஏற்பட்ட சுவாச பிரச்சினை காரணமாக அவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவர் தொற்றாளர் என்பது உறுதியாகியுள்ளது. உயிரிழந்தவரின் சடலம் அநுராதபுரம் பிரதேசத்தில் தகனம் செய்யப்பட்டுள்ளது.

# ஒரே நாளில் பத்தாயிரம் பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாம்!

இலங்கையில் மேலும் 9 ஆயிரத்து 889 பேருக்கு கொவிஷீல்ட் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் கொவிஷீல்ட் தடுப்பூசி வழங்கும் செயற்திட்டத்திற்கமைவாக, நேற்று முன்தினம் இரவு 8.30 மணியுடன் 8 இலட்சத்து 94 ஆயிரத்து 53 பேருக்கு கொரோனா தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (மார்ச் - 27) நாளில் மாத்திரம் 9 ஆயிரத்து 889 பேர் கொரோனா தடுப்பூசியை பெற்றுக்கொண்டனர் எனத் குறிப்பிடப்பட்டுள்ளது.

EXPRESS Courier Services
அண்ணா விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
077 8889388
075 3305500
070 3305500
லண்டன் ⇨ 1000/=
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)
எம்முடன் இணைந்து உங்களிடத்தில் பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்
யாழ்ப்பாணம் | சங்கத்தானை | கனகராயன்குளம்
சங்கானை | பளை | மல்லாவி
கல்வியங்காடு | கிளிநொச்சி | மன்னார்
ஆவரங்கால் | புதுக்குடியிருப்பு | வவுனியா
நெல்லியடி | முல்லைத்தீவு | கொழும்பு

சமையல் ஆள் தேவை
சைவ உணவு தயாரிக்கத் தெரிந்த சமையல் ஆள் தேவை. 45 வயதிற்கு உட்பட்ட ஆண் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:
076 740 3814

FOR SALE
German Shepherd Female Puppy
- 5 Week Old
- Black and Tan Colour
- Father - direct import
- Mother - Country Breed
- Worm treatment Given
Contact number - 0776300370

# மேல்மாகாணப் பாடசாலைகள் இன்று முதல் மீள ஆரம்பம்!

மேல் மாகாணத்திலுள்ள அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளும் இன்று (திங்கட்கிழமை) மீண்டும் ஆரம்பமாகவுள்ளன.

அதன்படி, தரம் ஒன்று முதல் சகல தரங்களுக்கும் இந்த ஆண்டுக்கான கற்றல் செயற்பாடுகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன. இது தொடர்பான விசேட சுற்றறிக்கை கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேராவால் வெளியிடப்பட்டுள்ளது.

மாகாண பிரதான செயலாளர்கள், மாகாண கல்வி செயலாளர்கள், மாகாண கல்வி பணிப்பாளர்கள், வலயக் கல்வி பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்கள் ஆகியோருக்கு இந்த சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள பாடசாலைகளை தனிமைப்படுத்தல் காலம் நிறைவடையும் வரையில் தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குறித்த சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், மாணவர்களை பாடசாலை சூழலுக்கு பழக்கப்படுத்துவதோடு, அவர்களது உளவியல் சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பாடசாலைகள் மீள திறக்கப்பட்ட பின்னர் மாணவர்களை பரீட்சைகள் அல்லது போட்டிகளுக்கு வழிநடத்துவதை தவிர்த்துக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.03.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org